# பாட்டாளி சிந்தனை

Volume 24 No. 12

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா

SUCI

August 2014

தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ்

விலை ரூ 3


## பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர்களை நினைவுகூர்வோம்!



*28 நவம்பர் 1820 – 5 ஆகஸ்ட் 1895*
பிரெட்ரிக் எங்கெல்ஸ்



*5 ஆகஸ்ட் 1923 – 5 ஆகஸ்ட் 1976*
சிப்தாஸ் கோஷ்

## மானியம்

# மக்களுக்கு மறுக்கிறார்கள், முதலாளிகளுக்கு வாரிக்கொடுக்கிறார்கள்!

நலிவுற்றிருக்கும் நாட்டின் பொருளாதாரத்தை தேற்ற வேண்டுமானால் உணவு, உரம், எரிபொருள், அனைத்துவிதப் பொது பயன்பாடு மற்றும் மக்கள் நலத்திற்கான அனைத்து மானியங்களையும் அரசாங்கம் திரும்பப்பெறவேண்டும் என்ற பல்லவியை முதலாளித்துவ பொருளாதார வாதிகள், கட்டுரையாளர்கள், ஆளும் கட்சியினர், மந்திரிகள் மற்றும் நிலவும் முதலாளித்துவ அமைப்பின் ஆதரவாளர்கள் சமீப காலமாக பாடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய வாதம் என்னவெனில், அரசாங்கத்தின் வருவாய்க்கும் செலவிற்குமிடையில் மிகப்பெரிய இடைவெளி இருக்கிறது என்பதாகும். வேறுவார்த்தையில் சொல்வதானால் மிகப்பெரிய பட்ஜெட் பற்றாக்குறை நிலவுகிறது. இம்மிகப்பெரிய பற்றாக்குறையானது பொருளாதாரத்தையே தடம்புரளச்செய்கிறது. எனவே, இந்த பற்றாக்குறையை அரசாங்கம் குறைத்தே ஆகவேண்டும். பற்றாக்குறையை குறைக்க தேவையற்ற செலவுகளை குறைத்துக்கொள்ள வேண்டும். பல்வேறுபட்ட பொது செலவுகளுக்காக அளிக்கப்படும் மானியங்களை ஈடுகட்ட கணிசமான அரசுப்பணம் செலவிடப்படுகிறது. அனைத்து மானியங்களும் திரும்பப் பெறாவிட்டாலும்கூட அதில் பெருமளவு வெட்டப்படவேண்டும். அரசாங்கமென்பது ஒரு தர்ம சத்திரமல்ல என பூர்ஷ்வா பொருளாதாரத்தின் ஆதரவாளர்கள் வாதிடுகிறார்கள்.

மக்களுக்கு மானியங்கள் அளிப்பது இனி மேலும் தொடரமுடியாது. பொருளாதார வளர்ச்சியை முடுக்கிவிடும் பொருட்டு மற்ற சில துறைகள் அரசாங்கத்திற்கு இருக்கின்றன. எனவே இம்மானியங்கள் தொடரவேண்டுமென பேசுபவர்கள் பொருளாதாரத்தின் புத்தூக்கத்திற்கும் வளர்ச்சிக்கும்

தொடர்ச்சி 2ம் பக்கம்

## மத்திய பிஜேபி அரசாங்கத்தின் முதலாளித்துவ ஆதரவு மக்கள் விரோத மத்திய பொது மற்றும் இரயில்வே பட்ஜெட்களை கண்டித்து ஆர்ப்பாட்டங்கள்



சென்னையில் 16.7.2014ல் நடைபெற்றது.




தேனியில் 15.7.2014ல் நடைபெற்றது.

## இந்திய பொருளாதாரத்தை கார்ப்பொரேட்மயமாக்கும் மத்திய பட்ஜெட் 2014ஐ எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சி கண்டிக்கிறது

*எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் ஜூலை 10, 2014 அன்று வெளியிட்ட அறிக்கை:*

திகட்டச்செய்யும் அலங்கார வாக்குறுதிகளுடன் வழக்கமான ஒதுக்கீடுகள் மற்றும் விளம்பரத்துடன் மத்திய நிதியமைச்சர் அருண் ஜெட்லியால் சமர்ப்பிக்கப்பட்ட பட்ஜெட்டானது, முக்கியத் துறைகளில் தாராள அந்நிய முதலீடு, பிபிபி (PPP) திட்டத்தின் மூலம் பல்வேறு துறைகளில் தனியார் மூலதனத்தை அனுமதிப்பது, உற்பத்தியாளர்களுக்கு விற்பனைவரி மற்றும் சுங்கவரிகளை பெருமளவு குறைப்பது மற்றும் சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு (SEZs) "புத்துணர்வு" ஊட்டுவது ஆகியவற்றுடன் கூடிய இந்தியப் பொருளாதாரத்தை கார்ப்பொரேட்மயமாக்கும் பிரமாணப் பத்திரமாகும். தனியார்மய களியாட்டம், "இந்தியா உலகத்தில் மிகப்பெரிய பிபிபி சந்தையாக உருவெடுத்துள்ளது" என நிதியமைச்சரே சொல்லுமளவிற்கு உள்ளது.

மிக முக்கியத் துறையான பாதுகாப்பு போன்ற துறையில் **49%** வரை நேரடி அந்நிய முதலீட்டை அனுமதித்ததன்மூலம் நாட்டின் பாதுகாப்பு ஒரு அபாய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. இதற்கு மாறாக முதலீட்டைத் திரும்பப்பெறும் வழியின் மூலம் காப்பீட்டுத் துறையில் நேரடி அந்நிய முதலீட்டின் உச்சவரம்பு **49%** வரை அதிகரிக்கப்பட்டுள்ளதானது, உண்மையில் அந்தக் கொள்கைக்கு முரணானதாகும். ஒரு காலத்தில் இந்திய பாலிசிதாரர்கள் தனியார் காப்பீட்டு நிறுவனங்களின் அபாயத்திற்குள்ளாவதை தடுக்கும் பொருட்டு அனைத்து தனியார் காப்பீட்டு நிறுவனங்களும் தேசியமயமாக்கப் பட்டு எல்ஐசி (Life Insurance Corporation of India) உருவாக்கப்பட்டது. பங்குகளின் சில்லரை விற்பனை மூலம் பொதுத்துறை வங்கிகளின் மூலதனத்தை திரட்டும் அறிவிப்பானது நாட்டு மக்கள் நீண்டகாலமாக எதிர்த்துவரும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் முதலீட்டைத் திரும்பப்பெறுவதே அன்றி வேறொன்றுமல்ல.

சிறப்புப் பொருளாதார மண்டலங்களின் தீமை குறித்து மக்கள் நன்கு அறிவர். ஆனால் அரசாங்கம் புத்துணர்வூட்டும் முடிவெடுத்துள்ளது. இது உள்நாட்டு–வெளிநாட்டு பெரு மூலதனங்களுக்கு ஏராளமாக தள்ளுபடிகளையும் சலுகைகளையும் அளிப்பதில் அரசாங்கம் எவ்வளவு ஆர்வமுடன் இருக்கிறது என்பதை நன்கு புலப்படுத்துகிறது.

உற்பத்திசாரா துறையான இராணுவ பட்ஜெட்டானது வழக்கம்போல் உயர்த்தப்பட்டுள்ளது. அது சென்ற வருடத்திய **2.03** இலட்சம் கோடியிலிருந்து **2.29** இலட்சம் கோடிகளுக்கு உயர்த்தப்பட்டுள்ளது. மறைமுகவரி **7525** கோடிகளுக்கு உயர்த்தப்பட்டுள்ளது. இதை சாதாரண மக்களே சுமக்க வேண்டும்.

வேலைவாய்ப்பை உருவாக்குவது, அபாயகரமான விலை உயர்வை தடுத்து நிறுத்துவது, பணவீக்கத்தை கட்டுப்படுத்துவது, இடைத்தரகர்களை ஒழித்து, ஏழை விவசாயிகளுக்கு குறைந்தபட்ச விலையை உத்தரவாதப்படுத்துவது மற்றும் பல சாதாரணமக்களை அழுத்தும் பிரச்சினைகள் குறித்து இப்பட்ஜெட் அசாத்தியமான மௌனம் சாதிக்கிறது.

தொடர்ச்சி 8ம் பக்கம்

## மானியம்

# மக்களின் உயிர்வாழ்வதற்கான உரிமைகள் மறுக்கப்படுகின்றன

*1ம் பக்கத் தொடர்ச்சி*

எதிரானவர்கள் என்று அர்த்தம் என அவர்கள் பேசுகிறார்கள். எனவே, முன்னாள் காங்கிரஸ் அரசாங்கத்தில் இருந்த அவர்களின் முன்னோடிகளைப் போலவே புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பிஜேபியின் பிரதமமந்திரியும் அவருடைய அமைச்சரவை சகாக்களும் சில 'கடுமையான முடிவுகளை' எடுக்கவேண்டும் என உறுதியாக வாதிடுகிறார்கள். இந்த 'கடுமையான முடிவுகள்' என்பதன் அர்த்தம் எரிபொருள் மற்றும் இரயில் கட்டணங்களை மிக அதிகமாக உயர்த்துவது, மானியங்களை பெருமளவு வெட்டுவது என்பதாகும்.

இந்த 'மானியம்' எனும் பேய் எங்கிருந்து வருகிறது? ஒரு சுதந்திரமான பண்பாடான நாட்டில் நாம் இருக்கிறோம். நமது சுதந்திரமான நாடு ஒரு அரசை பெற்றிருக்கிறது. அதன் குடிமக்கள் பிரிக்க முடியாதபடி அவ்வரசுடன் பிணைந்துள்ளனர். அரசினுடைய சட்டங்கள், நியதிகளை அனுஷ்டிக்க கடமைப்பட்டவர்கள். அரசின் அங்கமான அரசாங்கத்திற்கு கட்டுப்பட்டவர்கள், அதன் சட்ட அமைப்பிற்கு, வேறு வார்த்தையில் சொல்வதானால் அரசின் சட்டத்திற்கு கீழ்படியக்கூடியவர்கள். அவர்கள் பொறுப்புமிக்க குடிமக்களாதலால் அரசாங்கத்தின் மூலம் அரசின் ஆட்சியை ஏற்றுக்கொண்டு அடிபணிந்து நடக்கக்கூடியவர்கள். மறுபுறம், தன் குடிமக்களின் உணவு, உடை, இருப்பிடம், கல்வி, வேலை, சுகாதாரம் மற்றும்பிற அடிப்படை தேவைகள், எல்லாவற்றிற்கும் மேலாக அவர்களது வாழ்க்கைக்கு உத்தரவாதத்தை அளிக்க அரசு கடமைப்பட்டுள்ளது. எனவே, குடிமக்களின் பொறுப்பும் அரசின் கடமையும் ஒன்றுக்கொன்று சார்ந்தது. ஆட்சி செய்ய அரசுக்கு அதிகாரம் இருக்கும் பொழுது குடிமக்கள்தமது உரிமைகளை பெற்றிருக்கிறார்கள். உணவைப் பெறும் உரிமை, இருப்பிட உரிமை, கல்வி பெறும் உரிமை, வேலை மற்றும் பிற வசதிகளைப் பெறும் உரிமையை குடிமக்கள் பெற்றிருக்கிறார்கள்.

உணவுபெறும் உரிமை குறித்து இப்போது பார்ப்போம். தனது குடிமக்களுக்கு உணவு அளிக்கும் கடமையை அரசுதான் செய்யவேண்டும். குடிமக்களுக்கு உணவு என்ன விலைக்கு, எங்கிருந்து, எப்படி கிடைக்கும் எனும் கேள்விக்கு வருவோம். சந்தையிலிருந்து நியாயமான விலையில் உணவுப் பொருட்களை பெறும் வகையில் குடிமக்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படவேண்டும். அரசால் மக்களுக்கு அளிக்கப்பட்ட உரிமைகள் குறித்து அரசியலமைப்புச் சட்டம் வரையறுத்துள்ளது. உணவு பெறும் உரிமையும் இவ்வுரிமைகளில் ஒன்று. எனவே குடிமக்களுக்கு உணவு கிடைப்பதை உறுதிப்படுத்துவதன் மூலம் இவ்வுரிமையை அரசு உத்தரவாதப்படுத்த வேண்டும். இவ்வுரிமையை உத்தரவாதப்படுத்தும் வழிமுறைகளை அரசு தீர்மானிக்கிறது. உணவுப் பொருட்களில் தனியார் வணிகத்தை தடைசெய்து அரசாங்கமே நேரடியாக கொள்முதல் செய்து நியாயமான விலையில் குடிமக்களுக்கு விநியோகிப்பதுதான் இதற்கு ஒரே வழியாகும். ஆனால் இவ்வாறு செய்ய நமது அரசு தயாராக இல்லை. மாறாக, விலையை குறைக்கும் பொருட்டு 'மானியத்தை' வழங்கும் வழிமுறையை அரசு தேர்ந்தெடுத்துள்ளது. குடிமக்களின் வரிப்பணத்திலிருந்து உருவான அரசு கஜானாவிலிருந்து இம்மானியத்தை அரசு தருகிறது. எனவே, இதில் தருமஸ்தாபன நடவடிக்கை என்பதெல்லாம் ஒன்றும் இல்லை. மானியம் என்பது தற்போது பொருளாதாரம் பயின்ற அறிவுஜீவிகளாலும் மற்றும் பட்டறிவுப் புலமை மிக்க கல்வியாளர்களாலும் 'பொருளாதார கருத்துக்களால்' திரிக்கப்பட்டு திசை மாற்றப்பட்டு வருகிறது. ஆகவே அவர்கள் இந்த மானிய முறையைத் துடைத்தெரிந்துவிட பரிந்துரை செய்கிறார்கள். இது ஒட்டுமொத்தமாக குடிமக்களின் உணவு பெறும் நியாயமான அரசியல் உரிமையைப் பறித்துவிடும் செயலாகும். இந்த அடிப்படையான விஷயத்தை நமது 'பொருளாதார மேதைகள்' வேண்டுமென்றே உள்நோக்கோடு கண்டுங்காணாமல் விட்டுவிடுகின்றனர்.

மானியங்கள் திரும்பப்பெறப்பட்டால், விற்பனையாளரால் தீர்மானிக்கப்படுகின்ற விலையில்தான் இனி பொதுமக்கள் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களை வாங்கவேண்டியதிருக்கும். சந்தை விதிகளால்தான் விலைகள் தீர்மானிக்கப்படும் என்று 'சந்தை பொருளாதார' ஆதரவு நிபுணர்கள் சொல்வார்கள். ஆனால் விலைகளானது உற்பத்திச் சாதனங்களின் உடைமையாளர்களான பெரிய வியாபாரிகள், ஏகபோகங்களால் மிக அதிகபட்ச லாபத்தை நோக்கமாக வைத்து நிர்ணயிக்கப்படுகின்றன. சிறிய வியாபாரிகளால் அல்ல என்பதை நாம் நன்கு அறிவோம். விலைகளை கட்டுப்படுத்துபவர்கள் பெரிய வியாபாரிகளே என்பது அனுபவத்திலிருந்து அனைவரும் அறிந்ததே. இது எந்த தனிநபருடைய ஊகமோ, அனுமானமோ அல்ல, இந்த முதலாளித்துவ பொருளாதாரத்தினுடைய விதியாகும் இது. எனவே, மானியம் அளிக்கப்படாமல் சந்தை சக்திகளின் பிடிக்குள் ஒரு குடிமகன் தள்ளிவிடப்படும் போது அவன் தனது வாழ்வாதாரத்தை பெறும் அரசியல் உரிமையை இழக்கிறான். சந்தை பொருளாதாரத்திற்காக வாதிடுபவர்கள் சந்தை என்பது சுதந்திரமானது என வாதிடுகின்றனர். யாரெல்லாம் பணம் கொண்டுவருகிறார்களோ அவர்கள் பொருட்களை வாங்கமுடியும். அவர் செலவழிக்கும் தொகைக்கேற்ப சரக்குகளை பெறமுடியும். தேவை (Demand) அதிகரிக்கும் பட்சத்தில் சப்ளையும் (Supply) அதிகரிக்கும். சப்ளை அதிகரிக்கும்போது அங்கு பரிவர்த்தனையும் அதிகரிக்கும். பரிவர்த்தனை அதிகரிக்கும்போது பொருளாதாரம் செழுமையடையும். எல்லாவற்றிற்கும்மேல், அதிகரிக்கப்பட்ட சப்ளை என்பது அதிகரிக்கப்பட்ட உற்பத்தி, அதன் பொருள் மேலும் பொருளாதார முன்னேற்றம். எனவே வெளிச்சந்தைக்கு குடிமக்கள் வரும்போது, அவர்கள் சந்தை விலையை அளிக்கிறார்கள். அவர்கள் அதிகமாக கொடுக்க முடியாதபோது விலை கீழிறங்குகிறது, அவர்கள் அதிகமாக கொடுக்க முடிகிற போது விலை ஏறுகிறது. என்னே ஒரு சிறு பிள்ளைத்தனமான வாதம்!

ஆனால், பிரச்சினை என்னவெனில் சந்தைப் பொருளாதாரமென்பது அவ்வளவு எளிமையாக நடைபெறக்கூடிய ஒன்றல்ல. மக்களின் வாங்கும் சக்தியை சார்ந்துதான் தேவை என்பது இருக்கிறது. வாங்கும்சக்தி இல்லையேல் தேவையும் இல்லை. தேவை இல்லையேல் சப்ளையும் இருக்காது. சப்ளை இல்லையேல் உற்பத்தி நிறுத்தப்படும். உற்பத்தி நிறுத்தப்பட்டால் மக்களுக்கு வேலை இருக்காது. வேலை இல்லை என்பதன் பொருள் பணம் இல்லை என்பதாகும். பணம் இல்லையெனில் தேவை இல்லை. தேவை இல்லையெனில் சப்ளையும் இல்லை. இதன் விளைவாக சந்தை சுருங்குகிறது. இவ்வாறு இது ஒரு விஷச்சுழற்சியாகும். இதனைத் தொடர்ந்து சந்தை நெருக்கடி எனும் பொறியில் சாகும் முதலாளித்துவம் சிக்கிக்கொள்கிறது. மேலும், சீரழியும் சாகும் முதலாளித்துவத்தில் தேவை விழும் போது விலையிலும் வீழ்ச்சி ஏற்படாது. தீர்மானிக்கப்பட்ட லாபத்தை அடிப்படையாக வைத்து விற்பனையாளர், உடைமையாளர் ஆகியோரின் கூட்டுடன் விலை முன்னமே தீர்மானிக்கப்படுகிறது. போதுமான சப்ளை இருந்தாலும் தீர்மானிக்கப்பட்ட அவ்விலைக்கு குறைவாக அவர்கள் விற்கமாட்டார்கள். அவ்வப்பொழுது உணவுப்பொருட்கள் வீணடிக்கப்படுவதை, ஏன் அரசு குடோன்களில் கூட வீணடிக்கப்படுவதை யார்தான் அறியார்? சந்தையில் அவை விடுவிக்கப்பட்டால் விலை குறைந்துவிடுமல்லவா? எல்லாவற்றிற்கும் மேலாக, பெரிய வியாபாரிகள் மற்றும் அவர்களின் கட்டமைப்பால் உற்பத்தி மற்றும் விநியோக ஸ்தலத்திலேயே விலை நிர்ணயிக்கப்படுகிறது. இதுமட்டுமின்றி இடைத்தரகர்களாலும் விலை தீர்மானிக்கப்படுகிறது. இடைத்தரகர் என்பது முதலாளித்துவத்தின் பங்கும் பகுதியுமான அமைப்பாகும். உண்மை என்னவெனில், விலையை உயர்த்த பதுக்கல்காரர்களும் கறுப்புச் சந்தைகாரர்களும் கூட்டணி அமைத்து சப்ளையில் தில்லுமுல்லு செய்கிறார்கள். இவ்வாறுதான் சமூக விரோத சக்திகளால் விலைமுறைகேடு செய்யப்படுகிறதேயொழிய வெறும் தேவை – சப்ளையின் அடிப்படையில் "சந்தையில் தீர்மானிக்கப்படுவதில்லை. "சந்தையே அனைத்தையும் தீர்மானிக்கிறது" எனும் கூற்று முழுக்க முழுக்க ஒரு ஏமாற்றாகும். சந்தை என்பது தில்லுமுல்லுகாரர்கள், மோசடிக்காரர்களால் கட்டுப்படுத்தப்படுகிறதேயொழிய, சந்தை சுதந்திரமானதல்ல.

தற்பொழுது, மானியம் குறித்த கேள்விக்கு வருவோம். மானியங்களை விலக்கிக் கொள்வதால் முதலாளித்துவத்தின் தவிர்க்க முடியாத விதியின் காரணமாக தாறுமாறான சந்தைக்குள் குடிமக்கள் தள்ளப்பட்டு, விலை உயர்ந்து நுகர்வோரின் வாங்கும் திறன் பிழிந்தெடுக்கப்படுகிறது. எனவே, மானியம் விலகிக்கொள்ளப்பட்டால் அது பொருளாதாரத்தை புத்தாக்கமூட்டுவதாகத் தோன்றலாம். ஆனால் இந்த பொருளாதார புத்தாக்கமானது தேசநலனுக்கு எதிரானது. தேசம் என்று சொல்வதன்மூலம் விரல்விட்டு எண்ணிவிடக்கூடிய உடைமையாளர்களையும் அவர்களுடைய செல்வாக்குமிக்க சேவகர்களையும் நாம் குறிப்பிடவில்லை, மாறாக மிகப்பரந்துபட்ட சாதாரண மக்களையே குறிக்கிறோம். தேசத்தின் வளமை என்பது பொருளாதார வளர்ச்சிப் புள்ளிவிவரங்களில் இல்லை. குடிமக்களின் நாகரீக வாழ்வாதாரத்தின் மீதே இருக்கிறது. போதுமான உணவு, உடை, நல்ல இருப்பிடம், சுகாதாரம், கல்வி ஆகியன கிடைக்கப்பெறுவது, கணிசமான வருமானம், வாழ்க்கைத் தரத்தின் மேம்பாடு ஆகியவையே ஒரு நல்ல வாழ்வாதாரத்திற்கான உத்திரவாதமாகும்.

அடுத்த கேள்வி அரசு தன் குடிமக்களனைவருக்குமான தன் கடமையை நிறைவேற்றுகிறதா அல்லது அதில் பாரபட்சம் காட்டுகிறதா என்பதாகும். அரசு மற்றும் அதன் அடிவருடிகளின் பாதுகாவலனாக விளங்கக்கூடிய அரசாங்கம் வளர்ச்சியை முன்னெடுத்துச்செல்ல மானியங்களை விலக்கிக்கொண்டு அதன் சுமையை துன்பப்படும் மக்களின்மீது இறக்கிவைத்துத்தான் தீரவேண்டும் என கூறுகிறது. ஆனால் மானியங்கள் அனைவருக்கும் ஒரே மாதிரியாக விலக்கிக்கொள்ளப்படுகிறதா என்றால், அதற்கு பதில் இல்லை என்பதாகும். உணவு, உரம், எரிபொருள், கிராமப்புற வேலை உறுதியளிப்புத் திட்டம் உட்பட பொதுநலத்திற்கான மானியங்களைத் திரும்பப்பெறவேண்டுமென முதலாளித்துவ ஆட்சியாளர்களிடம் கூலிவாங்கும் பொருளாதாரவாதிகள் – கட்டுரையாளர்கள், மந்திரிகள் – அதிகாரவர்க்கத்தினர் அனைவரும் மிக அழுத்தமாக கூறும் அதேவேளையில் பெரும் தொழில் திமிங்கிலங்களுக்கு போதுமான ஊக்கமும் சலுகைகளும் தள்ளுபடிகளும் வரிவிலக்குகளும் தருவதன்மூலம் உற்பத்திச்செலவு குறைந்து மிக அதிகபட்ச லாபத்தை எளிதாக பெறமுடியும் எனவும் வலியுறுத்துகிறார்கள். இவ்வாறு அவர்கள் நேரடியாக சொல்லவில்லை. முதலீட்டாளர்களுடன் அரசாங்கம் செயலூக்கத்துடன் ஒத்துழைக்கவேண்டும் எனவும் 'முதலீட்டுக்கான சூழ்நிலையை' மேம்படுத்த சாதகமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் எனவும் கூறுகிறார்கள். முதலீட்டுக்கான சூழ்நிலையை எவ்வாறு மேம்படுத்தமுடியும்? இந்த தொழில் குழுமங்களுக்கும் கார்ப்பொரேட்டுகளுக்கும் வெளிநாட்டு ஏகபோகங்கள், பன்னாட்டு கம்பெனிகளுக்கும் வரி சலுகைகள், வரி விடுமுறைகள், முழு வரித் தள்ளுபடிகள், சிறப்புப் பொருளாதார மண்டலங்களைப்போல் (Special Economic Zone - SEZ) இலவச தண்ணீர், மின்சாரம், கட்டிமுடித்து தயாராக உள்ள சாலைகள், கப்பல் போக்குவரத்து, மூலப் பொருட்களை எளிதில் கிடைக்கச்செய்வது, எவ்வளவு முடியுமோ அவ்வளவு குறைவான வட்டியில் கடன் மற்றும் நிதிஉதவிகள், செயல்படாத சொத்துக்கள் (Non-performing assets) என அறிவிப்பதன் மூலம் கடனை திரும்பக் கட்டாமல் இருப்போரை மன்னித்தல் போன்ற ஏராளமான வழிகளில் இந்த முதலீட்டு சூழ்நிலையை உருவாக்குவது. உண்மையில் இதுபோன்ற தள்ளுபடிகளும் சலுகைகளும் முந்தைய காங்கிரஸ் அரசாங்கத்தால் 'நிதி ஊக்கத்தொகை' என்ற பெயரில் முதலாளித்துவ உடைமையாளர்களுக்கு வாரி வழங்கப்பட்டதேயாகும். இவ்வாறு வழங்கப்பட்ட நிதி ஊக்கமானது 7 லட்சம் கோடியை ஏற்கெனவே தாண்டிவிட்டது என்பது ஒரு தோராயமான கணக்காகும். இந்தத் தொகையை ஒப்பிடும்போது பொது நலத்திட்டங்களுக்கு அளிக்கப்படும் தொகை ஒன்றுமில்லாத ஒரு தொகையாகும். வேறு வார்த்தையில் சொல்வதானால் உலகப் பணக்காரர்கள் பட்டியலில் முதல்வரிசையில் இருக்கும், தங்கள் செல்வத்தை மலைபோல் குவித்துவைத்திருக்கும் ஏகபோக குழுமங்களுக்கும் தொழில் திமிங்கிலங்களுக்கும் இதுபோல் சலுகைகளை வழங்காதிருந்தால் அரசு கஜானாவில் அந்த அளவிற்கு நிதியிருந்திருக்கும், பற்றாக்குறை குறைந்திருக்கும் எந்த நிதிப்பற்றாக்குறையும் வராமலிருந்திருக்கும். பின் இந்த நிதி ஊக்கத்தையும் வரிவிலக்குகளையும் எவ்வாறு அழைப்பது? இவையெல்லாம் உடைமை வர்க்கங்களுக்கு அளிக்கப்படும் "மானியங்கள்" இல்லையா? பொருளாதாரவாதிகள், கட்டுரையாளர்கள் என்றழைத்துக் கொள்ளும் இவர்கள் பொருளாதார வார்த்தை ஜாலங்களைக் கொண்டு இதை மறுக்க முடியுமா?

பிரதமர் நரேந்திர மோடி குஜராத் முதல்வராக இருந்தபோது டாடாவுக்கும் அம்பானிக்கும் அதானிக்கும் மூலதன தீவிர தொழிற்சாலைகள்

தொடர்ச்சி 7ம் பக்கம்

## சிரியாவில் நடைபெற்ற தேர்தல்

# யுஎஸ் ஏகாதிபத்தியவாதிகளின் சூழ்ச்சி மற்றும் தீவிரவாத நடவடிக்கைகள் சிரியா மக்களால் புறக்கணிப்பு

சில மாதங்களுக்கு முன் சிரியாவில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் மக்களின் ஏகோபித்தத் தீர்ப்பின்படி பாஷர் அல் ஆசாத் வெற்றிபெற்று மூன்றாவது முறையாக ஜனாதிபதியாக பொறுப்பேற்றிருப்பது உலகின் கவனத்தை ஈர்த்திருக்கிறது. ஆசாத்தின் வெற்றிவாய்ப்புகள் குறித்த தகவல்கள் வெளிப்படையாக வந்துகொண்டிருக்கும் அதே நேரத்தில் தேர்தல் என்பது கேலிக்கூத்து என்று யுஎஸ் ஏகாதிபத்தியவாதிகள் பரப்பும் பொய்யான கூற்றுகளும் வந்துகொண்டிருக்கின்றன. இது குறித்து நாம் கருத்துத் தெரிவிக்கும் முன்பாக இதன் அரசியல் பின்னணியை விவரிக்க, நாம் அவசியமென்று கருதும் இரண்டு விஷயங்களை இங்கு எடுத்துக் காட்ட வேண்டியிருக்கிறது.

### சமீபத்தில் எகிப்து நாட்டில் நடந்த தேர்தல்

சிரியாவில் நடந்த தேர்தலை கேலிக்கூத்து என்று வர்ணிக்கின்ற இதே ஏகாதிபத்தியவாதிகள் எகிப்தில் முன்னாள் இராணுவக் கமாண்டர் அப்துல் பட்டா எல்சிசியினால் நடத்தப்பட்ட தேர்தல் வெற்றியையும் பெட்ரோ பொரோசென்கோ என்ற கோடீஸ் வரருக்கு ஆதரவான பாசிச சக்திகளால் உக்ரைனில் நடந்த தேர்தல் முடிவையும் ஆகா! ஓகோ! என்று புகழ்பாடி ஏற்றுக்கொள்கிறார்கள். இந்த இரண்டு நாடுகளிலும் சமீபத்திய தேர்தலின் மூலமாக முந்தைய தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கங்களை வீழ்த்தி அதிகாரத்திற்கு வந்திருக்கின்ற சக்திகள் தங்களால் கவர்ந்து கொள்ளப்பட்ட அதிகாரத்தினைப் பயன்படுத்தி அனைத்து எதிர்க்கட்சிகளையும் காட்டுமிராண்டித்தனமாக ஒடுக்கி தேர்தலை ஒரு சம்பிரதாய நடைமுறையாக நடத்தித்தான் அதிகாரத்திற்கு வந்திருக்கிறார்கள். ஆகவேதான் இந்த இரண்டு நாடுகளிலும் பல லட்சக்கணக்கானவர்கள் வாக்களிக்க மறுத்து தங்களின் எதிர்ப்பை வெளிக்காட்டியிருக்கிறார்கள்.

இந்த இரண்டு நாடுகளில் எகிப்து நாட்டில், 2011யில் நடைபெற்ற 'அரபு எழுச்சி' (Arab Spring) மக்கள் எழுச்சி இயங்கங்கள் என்று அரசியல் நோக்கர்களால் வர்ணிக்கப்பட்ட போராட்ட இயக்கங்கள் வளர்ந்தெழுந்த பல்வேறு அரபிய நாடுகளின் வரிசையில் ஒன்றாகும். இந்த நாடுகளில் சகாப்தங்களைக் கடந்தும் நீடித்துவந்த ஏதேச்சதிகாரம், கொடுங்கோன்மை, ஊழல், மற்றும் ஒடுக்குமுறை ஆட்சியினை நடத்திக் கொண்டிருந்த தத்தம் ஆட்சியாளர்களை எதிர்த்து மக்கள்திரள்மிகுந்த எழுச்சிகள் நடந்தன. எகிப்து மற்றும் உலக வரலாற்றில் இதுவரை கண்டிராத வகையில் இலட்சக்கணக்கான மக்கள் தங்களின் அரசியல் கருத்துவேறுபாடுகள், மதம் மற்றும் சமூக பொருளாதார நிலைகளைக் கடந்து தெருக்களில் ஒன்று திரண்டனர். எகிப்தின் தலைநகரான கெய்ரோவின் தாஹிர் ஸ்கொயர் மைதானத்திலும் அந்நாட்டின் பிற பகுதிகளிலும் தங்களின் போராட்ட மையங்களை ஏற்படுத்தி தங்களின் உறுதியான எதிர்ப்பின் மூலம் முதலாளித்துவ அரசு எந்திரத்தை அப்பட்டமாக ஒரு இராணுவ அரசாங்கத்திற்குத் தலைமையேற்றதன் மூலமும் யுஎஸ் ஏகாதிபத்தியத்தின் துணையோடும், அவர்களின் கண்காணிப்பிலும் நடத்திவந்த ஜனாதிபதி ஹோசினி முபாரக்கின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவந்து அவரை ஆட்சியிலிருந்து வெளியேற்றினர். ஆயினும் கூட எகிப்தின் எழுச்சி மற்றும் இதுபோன்றே அரபு பகுதியின் பிற நாடுகளில் நடந்த போராட்டங்களும் கூட அவர்களின் இலட்சிய இலக்கான ஏதேச்சதிகாரம், ஒடுக்குமுறை மற்றும் கொடுங்கோன்மை மற்றும் சுரண்டலிருந்து விடுதலை என்ற இலக்கை எட்டமுடியாமல் போனது. நாம் அப்பொழுதே சுட்டிக்காட்டியது போல் அவர்களின் நிலைமையை அடிப்படையில் புரட்சிகரமாக மாற்றியமைக்கின்ற அணிதிரட்டப்பட்ட தளர்வற்ற போராட்டத்திற்குத் தலைமையேற்கின்ற புரட்சிகரத் தலைமை இல்லாததே அதற்கு காரணமாகும்.

எகிப்தில் நடந்த இந்தப் போராட்ட இயக்கங்களில் மிகவும் அணிதிரட்டப்பட்ட சக்தியான இஸ்லாமிய அடிப்படைவாத இயக்கம் என அறியப்பட்ட முஸ்லீம் பிரதர்ஹுட் (Muslim Brotherhood) என்ற இயக்கம் குழுக்களும் தலைமையை கைப்பற்றியது. அதன் தொடர்ச்சியாக அவ்வியக்கத்தின் தலைவர் முகமது மோர்சி தேர்தலின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஜனாதிபதியாகப் பொறுப்பிற்கு வந்தார். இந்தத் தேர்தலும் கூட முறைகேடான வழியில் நடத்தப்பட்டது என விமர்சிக்கப்பட்டது. நாட்டின் முற்போக்கான மற்றும் மதச்சார்பற்ற மக்கள் பகுதியினர் அஞ்சியதைப் போலவே இந்த சக்திகள் தங்களின் அடிப்படைவாத நிகழ்ச்சி நிரலில் ஒன்றான பொதுவாழ்க்கையில் இஸ்லாமியச் சட்டத்தை அறிமுகப்படுத்தினர், பெண்களின் மீதான கொடுமைகளை வேறு கோணத்தில் அணுகினர், அதிகாரமிக்க பதவிகளிலிருந்து ஹோஸ்னி முபாரக்கின் ஆட்களை வெளியேற்றவில்லை, அப்பட்டமான ஏகாதிபத்திய ஆதரவு நிலையெடுத்து ஜியோனிச இஸ்ரேலுக்கு ஆதரவாக நின்று சிரியா அரசாங்கத்தை தூக்கியெறிய துணைபோனது. அதுமட்டுமல்லாமல் மக்களுக்கான மின்சாரம் மற்றும் உணவிற்கான மானியங்களை வெட்டிக் குறைக்க வேண்டுமென்ற ஐஎம்எப்பின் கோரிக்கைகளுக்கு இணைந்து சென்றது. ஆனால் இந்தத் துரோகங்கள் எல்லாம் மிக விரைவிலேயே மக்களுக்குத் தெளிவாகி 1.5 கோடி எதிர்ப்பு மனுக்கள் வழியாகவும், மோர்சி அரசாங்கத்திற்கெதிரான கிளர்ச்சி என்றும் அது வெளிப்பட்டது.

மோர்சி அரசாங்கத்திற்கெதிரான மக்களின் இந்த கோபம் மற்றும் அதிருப்தியை பயன்படுத்தி ஜெனரல் சிசி என்பவர் இராணுவக் கிளர்ச்சி நடவடிக்கையின் மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்ட முஸ்லீம் பிரதர்ஹுட் அரசாங்கத்தைக் கவிழ்த்து கடந்த ஆண்டில் அதிகாரத்திற்கு வந்தார். பின்பு ஜெனரல் சிசியால் அமைக்கப்பட்ட அரசாங்கம் எகிப்திய வரலாற்றில் இதுவரையில் இல்லாத அளவிற்கு மக்கள் இயக்கங்களை நசுக்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்தது. அரசியல் அமைப்புச் சட்டத்தை ரத்துசெய்தது, மோர்சியையும் அவரின் நூற்றுக்கணக்கான ஆதரவாளர்களையும் கைது செய்ய ஆணைபிறப்பித்தது மற்றும் முஸ்லீம் பிரதர்ஹுட் இயக்கத்தின் அப்பாவி ஆதரவாளர்களை ஆயிரக்கணக்கில் கொன்றுகுவித்தது. இவ்வாறாக நாட்டில் எழுந்த மிகப் பலம்வாய்ந்த அணிதிரட்டப்பட்ட எதிர்ப்பு சக்தியை அழித்தது. 96% வாக்குகளைப் பெற்று ஜெனரல் சிசி தேர்தலில் வெற்றிபெற்றார். எவ்வாறாயினும் எகிப்தின் 56 மில்லியன் வாக்காளர்களில் 46 சதவீதத்தினர் மட்டுமே தங்களது வாக்குகளைப் பதிவு செய்தனர். இது 2012யில் நடந்த முறைகேடான ஜனாதிபதித் தேர்தலில் மோர்சியால் பெறப்பட்ட வாக்குசதவீதம் 52% காட்டிலும் குறைவானதாகும். தற்போது நடந்த தேர்தலில் கிட்டத்தட்ட வாக்குச்சாவடிகள் வெறிச்சோடிக் கிடந்தன 10 சத வாக்குகளே பதிவாயின. எனவே ஜெனரல் சிசி அரசாங்கம் வாக்குப்பதிவை மேலும் இரண்டு நாட்களுக்கு நீட்டித்தார். விடுமுறையும் அறிவித்தார், வாக்குச்சாவடியின் பகுதிகளுக்கு இலவசமாக போக்குவரத்து வசதியையும் செய்தார். இலட்சக்கணக்கான ஏழை எகிப்தியர்களால் தரமுடியாத தொரு தொகையான 70 டாலர் தண்டனைத் தொகை விதிக்கப்படுமென்று வாக்களிக்காதவர்களை மிரட்டினர். அரசியல் அதிருப்தி சுதந்திரத்தை ஒடுக்கியதால் இளைஞர்களிடம் எழுந்த அதிருப்தி முஸ்லீம் பிரதர்ஹுட் இயக்கம் தேர்தலை புறக்கணிக்க அழைப்பு விடுத்தது மற்றும் எல்லாவற்றுக்கும் மேலாக மற்றுமொரு இராணுவ சர்வாதிகாரி ஜனாதிபதியாவதற்கு மக்களின் எதிர்ப்பு ஆகியவற்றால் வாக்குப்பதிவு குறைந்தது. இது நடந்துவிட்டால் 'தேர்ந்தெடுக்கப்பட்ட' ஜனாதிபதி என்ற திரைக்குப் பின்னாலிருந்து கொண்டு இராணுவ சர்வாதிகாரத்தை நடத்தும் இவர், ஊழல்மயமான இராணுவத்தின் நலனைப் பாதுகாப்பதோடு ஜனநாயகத்தின் நம்பிக்கைகளைச் செல்லாததாக்கி பொருளாதாரத்தை சீர்குலைப்பார். அனைத்தும் ஒரு மனிதனுக்காக என்று ஊடகங்கள் மக்களிடம் பொய்சொல்லும் என்பதை அறிந்துதான் போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் இந்தத் தேர்தல் முறைகேடானது என்று விமர்சிக்கின்றனர். ஆனால் மற்றொருபுறத்தில் வியாபாரக் குழுமங்களும், கார்ப்பொரேட்டுகளும் அதாவது முதலீட்டாளர்கள் மற்றும் சவுதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட் மற்றும் குவைத் ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஆட்சியாளர்களும் அரபு நாடுகளின் மிகவும் பிற்போக்கு சக்திகளும் இந்த தேர்தல் முடிவை வரவேற்கின்றனர். அவர்கள் உலக வங்கி மற்றும் ஐஎம்எப் இன் பரிந்துரைகளை பின்பற்றி புதிய தாராளவாத சீர்திருத்தங்களை சிசியிடமிருந்து எதிர்பார்த்தனர். துவக்கத்தில் சில விமர்சன முனுமுனுப்புகளைச் செய்தபோதும் யுஎஸ் ஏகாதிபத்தியவாதிகளுக்கு மேற்கத்திய நாடுகளில் எகிப்திற்கு அருளாசி வழங்கக்கூடிய இந்த வெற்றியை புகழ்வதைத் தவிர வேறு வழியில்லை. ஏனெனில யுஎஸ் ஏகாதிபத்திய சக்திகளுக்கு எகிப்திய இராணுவம் தான் இந்துப் பகுதியில் ஒரு திடமான அடித்தளமாக செயல்பட்டு வருகிறது. இம்மாதிரியான பல்வேறு சம்பவங்களுக்குப் பிறகு அடிப்படைவாத முஸ்லீம் பிரதர்ஹுட் மற்றும் சிசியால் நடத்தப்படும் கொடுங்கோல் இராணுவ ஆட்சி இவை இரண்டுக்குமிடையில் சிக்கி மக்கள் அல்லல்பட்டுவருகின்றனர். தாங்கள் விரும்பிய விடுதலை இலக்கை நோக்கித் தங்களின் போராட்டத்தைத் தலைமையேற்று வழிநடத்தும் சரியான புரட்சிகரத் தலைமையின்றி தாங்கள் நிர்கதியாக விடப்பட்டிருப்பதன் வலியை அவர்கள் உணர்ந்திருக்கவேண்டும்.

### உக்ரைனில் நடந்த தேர்தல்

சோசலிசம் வீழ்ச்சியுற்று ஒன்றுபட்ட சோவியத் யூனியனில் அங்கம் வகித்த பல்வேறு நாடுகள் உடைந்து சிதறுண்டதற்குப் பின்பிருந்து முன்னாள் சோவியத் யூனியனின் ஒரு அங்கமாக இருந்துவந்த உக்ரைன் நெருக்கடிமிகுந்த, ஊழலால் பீடிக்கப்பட்ட, வன்முறை மற்றும் சுரண்டல் முதலாளித்துவ ஆட்சியின் கீழ் இருந்து வந்திருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் ஐரோப்பிய யூனியன், யுஎஸ் ஏகாதிபத்தியம் மற்றும் ரஷ்ய முதலாளித்துவம் ஆகியவை உக்ரேனின் சந்தையைப் பிடிப்பதற்கும் தங்களின் செல்வாக்கை விரிவுபடுத்துவதற்குமான மோதலின் மையக்களமாகவும் அந்த நாடு வேகமாக மாறிவிட்டது. இதற்கும் உக்ரேனிய மக்களின் நலனுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. சில மாதங்களுக்கு முன்புதான் முதலாளித்துவ அரசாங்கத்திற்குத் தலைமை வகித்த ஜனாதிபதி விக்டர் யெனுகோவிச்சின் அரசாங்கத்திற்கு எதிரான மக்களின் கோபம் மற்றும் அதிருப்தியைப் பயன்படுத்தி நன்கறியப்பட்ட ஏகாதிபத்திய ஆதரவு பிற்போக்கு சக்திகள் மற்றும் கம்யூனிச எதிர்ப்பு பாசிச சக்திகள் அவரை பதவியிலிருந்து தூக்கியெறிந்து ஐரோப்பிய யூனியன் மற்றும் யுஎஸ் ஏகாதிபத்தியங்களின் ஆதரவோடும் துணையுடனும் அதிகாரத்திற்கு வந்தனர்.

மற்றொருபுறத்தில், உக்ரேனின் ஒரு பகுதியான கிரிமியாவின் மேற்குப்பகுதியில் உக்ரைனிய மொழி பேசும் சிறுபான்மையினருக்கும் கிழக்கு மற்றும் தென்பகுதியில் வசிக்கும் ரஷ்ய மொழிபேசும் பெரும்பான்மையினருக்குமிடையே நடைபெறும் மோதல்களைப் பயன்படுத்தி ரஷ்யா உக்ரைனிடமிருந்து கிரிமியாயை மீண்டும் தன்வசம் ஆக்கிக்கொண்டது. சில வாரங்களுக்கு முன்னதாக உக்ரைனின் கிழக்கு மற்றும் தென்பகுதி மக்களின் தன்னாட்சி உரிமைக்கான கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பில் பல இலட்சக்கணக்கானவர்கள் உற்சாகமாக வாக்களித்தனர். ஆனால் உக்ரைன் நிர்வாகத்தினர் மற்றும் ஏகாதிபத்தியவாதிகளால் இந்தத் தேர்தல் சட்டவிரோத மானது என்று ரத்துசெய்யப்பட்டது. ஆனால் இந்தப் பின்னணியில் பெட்ரோ பொரசென்கோ என்ற ஏகாதிபத்தியக் கோடீஸ்வரர் சமீபத்திய ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்றபோது ஐரோப்பிய யூனியன் மற்றும் யுஎஸ் ஏகாதிபத்தியவாதிகள் வெற்றிபெற்ற பெட்ரோ பொரசென்கா தங்களுக்கு அடிபணிவார் என்று எதிர்பார்த்து அவரின் வெற்றியைப் புகழ்ந்தார்கள் ஆனால் துரதிர்ஷ்டவசமாக கிழக்கு மற்றும் தென்பகுதி உக்ரைனில் வாழும் இலட்சக்கணக்கான வாக்காளர்கள் யாரெல்லாம் சில வாரங்களுக்கு முன்பு தன்னாட்சி உரிமை வேண்டுமென்று ஆர்வத்துடன் கலந்து கொண்டு வாக்களித்தார்களோ அவர்கள் அனைவரும் வெளிப்படையாகவே இந்தத் தேர்தலில் அதிருப்தியடைந்தனர். இந்தப் பகுதியின் பெரும்பாலான வாக்குச்சாவடிகள் வெறிச்சோடிக் கிடந்தன.

இவ்வாறாக எகிப்தில் நடந்ததைப் போலவே இலட்சக்கணக்கானவர்கள் உக்ரைனில் நடந்த தேர்தலையும் புறக்கணித்தனர். இந்தப் புறக்கணிப்பு மிக உறுதியாகவும் தீர்மானகரமாகவும் 'எங்களுக்கு மக்கள் ஆதரவிருக்கிறது' என்ற சர்வாதிகாரிகளின் போலியான வாய்ஜாலங்களைத் தகர்த்தது. ஆனால் இதற்கு மாறாக, எகிப்திலும் உக்ரைனிலும் நடந்த முறைகேடான தேர்தல் நடைமுறைகளுக்கு யுஎஸ் மற்றும் பிற ஏகாதிபத்தியவாதிகள் எல்லாவிதத்திலும் ஆதரவளித்தனர். இதன்மூலம் இந்த நாடுகளில் தங்களின் மேலாதிக்கத்தினை அனைத்து வகையிலும் பராமரித்து விரிவுபடுத்துதலைத் தலைவணங்கி

தொடர்ச்சி 4ம் பக்கம்

## சிரியாவில் நடைபெற்ற தேர்தல்

# மக்கள் இயக்கத்தில் புரட்சிகர தலைமையின் தேவையை மீண்டும் வலியுறுத்துகிறது

3ம் பக்கத் தொடர்ச்சி

ஏற்றுக் கொள்ளும் சக்திகள் ஆட்சிக்குக் வர வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள் என்பது தெளிவாக புலப்படுகிறது.

### சிரியா மக்கள் மீது திணிக்கப்பட்ட போர் ஏகாதிபத்தியவாதிகளால் உருவாக்கப்பட்டது

மத்திய கிழக்கு அரபுப்பிராந்தியத்தில் வலுவான முதலாளித்துவ ஆட்சியின் கீழ் உழன்று வரும் நாடான சிரியா தற்போது ஜனாதிபதி பஷார் அல் ஆசாத்தின் ஆட்சியின் கீழ் இருந்துவருகிறது. சீரழிந்த முதலாளித்துவக் காலகட்டத்தின் மற்ற பிற முதலாளித்துவ நாடுகளில் நிகழ்ந்துவருவதைப் போலவே சிரியா மக்களும் ஈவிரக்கமற்ற முதலாளித் துவ ஆட்சியின்கீழ் ஒடுக்கப்பட்டு சுரண்டப்படு கிறார்கள். ஆனால் இந்தக் காரணத்திற்காக எந்த ஒரு ஏகாதிபத்திய சக்திக்கும் அல்லது மத்தியக் கிழக்கின் எந்தவொரு ஏகாதிபத்திய ஆதரவு பிற் போக்கு அரசாங்கத்திற்கும் சிரியாவில் ஒரு அதிகார மாற்றத்தைக் கொண்டுவரும் நோக்கத்துடன்கூடிய குறுக்கீடுகளுக்கும், தூண்டுதல்களுக்கும் அதிகார மளித்ததாக ஆகிவிடாது. அதாவது ஜனாதிபதி ஆசாத்தை பதவியிலிருந்து துரத்தி அவ்விடத்தில் அவர்களுக்கு ஆதரவான பிற்போக்கு சக்திகளை உள்ளடக்கிய ஒரு பொம்மை ஆட்சியை நிறுவுவது நியாயமென்றும் ஆகிவிடாது.

ஆனால் ஏகாதிபத்தியவாதிகளின் மற்றும் அவர் களின் கூட்டாளிகளின் இதுவரையிலான கடந்த மூன்றாண்டுகால தொடர்ச்சியான யுத்தம் மற்றும் கிளர்ச்சிகளின் பயனாக சிரியாவில் இதுவரையில் 1,50,000 பேர் கொல்லப்பட்டிருக்கின்றனர். 30 இலட்சத்திற்கும் அதிகமான சிரியா மக்கள் நாட்டை விட்டு வெளியேறியிருக்கிறார்கள். சிரியாவில் நடந்து வரும் யுத்தம் மற்றும் கிளர்ச்சி பற்றி பல்வேறு பொய்யான பிரச்சாரங்கள் கட்டவிழ்த்துவிடப் பட்டதையும் மீறி சிரியாவின் மீது 'கிளர்ச்சியாளர் களால்' திணிக்கப்பட்டிருக்கின்ற இந்த யுத்தம் யுஎஸ், ஐரோப்பிய யூனியன் ஏகாதிபத்தியவாதிகள் மற்றும் சௌதி அரேபியா நாட்டின் ஆட்சியாளர் களால் ஆதரிக்கப்படும் மற்றும் அரபு பிராந்தியத்தின் பிற பிற்போக்கு அதிகார சக்திகளிடமிருந்து ஆயுதம் மற்றும் நிதியுதவி பெறுகின்ற பல்வேறு தீவிரவாதக் குழுக்களினால்தான் நடத்தப்பட்டுவருகின்றது என்பதை வெளியுலகம் நன்கறியும். இதன் காரண மாக சிரியா ஜனாதிபதி ஆசாத்தும் அவரின் முத லாளித்துவ அரசாங்கமும் சுதந்திரத்தை நேசிக் கின்ற உலகமக்களிடமிருந்து ஏகாதிபத்தியத்தின் தலையீடுகளையும், குறுக்கீடுகளையும் எதிர்ப்பதற் கான உறுதியான ஆதரவைப்பெறமுடியும். இந்த அரசியல் பின்னணியில்தான் தேர்தல் நடந்து ஜனாதி பதி ஆசாத்தின் ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலைப் பாட்டுக்கு மக்கள் தங்களின் ஆதரவை உறுதிப் படுத்தும் விதமாகவும், ஏகாதிபத்தியத்தின் சூழ்ச்சித் திட்டங்களை உறுதியாகப் புறக்கணிக்கும் வித மாகவும் முடிவுகள் அமைந்திருக்கின்றன.

### சிரியாவில் நடந்த தேர்தல்

எகிப்திலும் உக்ரைனிலும் நடந்த தேர்தல்கள் ஏகாதிபத்தியவாதிகளுக்கு மிகவும் சாதகமாக இருக்க சிரியா தேர்தலோ அதிலிருந்து முற்றிலும் மாறுபட்டிருந்தது. எகிப்திலும் உக்ரைனிலும் நடந்த தேர்தல்களை ஆகா! ஓகோ! என்று ஏகாதிபத்திய வாதிகள் புகழ்பாடிக் கொண்டிருக்கையில் மேற்கு நாட்டு ஊடகங்கள் சிரியாத் தேர்தலை மக்கள்மீது வலிந்து திணிக்கப்பட்ட தேர்தல் என்பதாக முன் னிறுத்திப் பிரச்சாரம் செய்கின்றன. ஏகாதிபத்திய ஆட்சியாளர்களும் அவர்களுக்குச் சேவகம் செய்யும் ஊடகங்களும் சிரியா அரசாங்கம் தேர்தலை நடத்து வதற்கு எந்த உரிமையும் இல்லை ஏனெனில் நாடு ஒரு சிவில் யுத்த நிலைமைகளுக்கு மத்தியில் இருந்து கொண்டிருக்கிறது என்று ஆணித்தரமாகச் சொல் கிறார்கள். யுஎஸ் அரசுச் செயலாளர் இது ஒரு கேலிக்கூத்தான தேர்தல் என்று முடிவுகட்டிப் பேசத்துவங்கிவிட்டார். இவையனைத்திற்கும் மேலாக ஏகாதிபத்தியங்கள் இராணுவ அதிகாரிகளையும், அரசியல்வாதிகளையும், கார்ப்பொரேட்டுகள் நிதியுதவியில் செயல்படும் மனித உரிமை அமைப்பு களையும் என்ஜிஓக்களையும் அந்த நாட்டுக்கு அனுப்பினார்கள். தேர்தல் நடவடிக்கைகளை நடு நிலையோடு கவனிப்பதாகச் சொல்லி தேர்தல் நடைமுறைகளில் தலையிடுவதும்கூட ஊடுருவல் மற்றும் வன்முறைப் பிரயோகங்களின் வேறு வடிவங்களே, மேலும் இந்தத் தேர்தலைச் செல்லாத தாக்கும் அவர்களின் அடுத்த முயற்சியாக ஒரு மோச மான தந்திரத்தையும் அவர்கள் கையாண்டார்கள்.

தாயகம் கடந்து வேறுநாடுகளில் குடியேறி யிருக்கும் சிரியா மக்கள் வழக்கமாக அவர்களின் வாக்குகளை அவர்கள் வசிக்கின்ற நாட்டில் இருக்கும் சிரியா நாட்டுத் தூதரகங்களில் பதிவுசெய்வார்கள். மேற்கு நாடுகளின் கார்ப்பொரேட் ஆதரவு ஊடகங் களான வாஷிங்டன் போஸ்ட், நியுயார்க் டைம்ஸ், பிபிசி மற்றும் ரெய்டர்ஸ், போன்ற பத்திரிகை மற்றும் ஊடகங்களும் கூட லெபனானில் வாக்களிக்க மக்கள் நின்ற வரிசை பல கிமீ தொலைவிற்கு நீண்டு சென்றது என்றும் சிரியாவிற்கு வெளியில் வாழும் சிரியர்கள் பல மைல் தூரம் நடந்து சென்று கொளுத்தும் வெயிலில் நின்று தங்களது வாக்கு களைப் பதிவுசெய்தனர் என்று செய்தி வெளி யிட்டன. 50 இலட்சத்திற்கும் மேலான சிரிய இளம் வாக்காளர்கள் ஜனாதிபதி பஷர்அலி ஆசாத்தின் படங்கள் மற்றும் சிரியநாட்டுக் கொடிகளை ஏந்தி வாக்குச் சாவடிகளில் குவிந்தனர் என்ற செய்திகளும் வந்திருக்கின்றன. நிலைமை இவ்வாறிருக்க யுஎஸ், பிரான்ஸ் ஜெர்மனி, பெல்ஜியம் மற்றும் யுனைடெட் அராப் எமிரேட் நாடுகளில் சிரியர்கள் தங்கள் நாட்டின் தூதரகங்களில் வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டது. நியுயார்க் நகரில் தாயகம் பெயர்ந்த சிரியர்கள் ஐக்கிய நாடுகள் சபையின் அலுவல கத்தின் முன் ஒன்று திரண்டு தங்களின் வாக் களிக்கும் உரிமையை யுஎஸ் மறுத்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

ஏகாதிபத்தியவாதிகளால் ஆதரிக்கப்பட்டு, கண்காணிக்கப்பட்டு, ஆயுதபாணிகளாக்கப்பட்டு அவர்களால் ஆசிர்வதிக்கப்படும் 'சிரியா கிளர்ச்சி சக்திகள்' இந்தத் தேர்தலை மக்கள் புறக்கணிக்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்தனர். வெகு ஜனங்களிடையே பரந்துபட்ட அளவில் வன்முறை பீதியைக் கிளப்பி, அச்சுறுத்தி தங்களின் தேர்தல் புறக்கணிப்பைச் செயல்படுத்த நினைத்தனர். ஆனால் சிரியா அகதிகள் லெபனானிலிருந்தும் பிறநாடுகளி லிருந்தும் வந்து வாக்களிப்பதற்காகக் குவிந்தது தேர்தல் புறக்கணிப்பிற்கான கிளர்ச்சியாளர்களின் கோரிக்கையை மக்கள் ஒட்டு மொத்தமாகப் புறக் கணித்துவிட்டனர் என்பதையே காட்டியது.

உள்நாட்டிலும் நிலைமை வேறுபட்டதாக இல்லை. மேற்குநாடுகளின் ஊடகங்கள் மௌனம் சாதித்தன. ஆனால் சிரியாவிற்குச் சென்றிருந்த சர்வ தேச நாடுகளின் பிரதிநிதிகள் அறிக்கைகளின் வழியாக இந்த உண்மைகள் செய்தியாக வெளி வந்தன. பல்வேறு லத்தின் அமெரிக்க நாடுகள் மற்றும் பிரிக்ஸ் நாடுகள் (பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்ஆஃப்ரிக்கா) மற்றும் உகாண்டா, வெனிசூலா மற்றும் ஈரான் ஆகிய நாடுகளின் பாராளுமன்ற உறுப்பினர்களும் கூட மேற்கு ஊட கங்கள் முன்னிறுத்துவதற்கு மாற்றான வகையில் தேர்தல் 'சுதந்திரமாக' 'ஜனநாயகச் சூழலுடன்' நடந்த தாக கருத்து வெளியிட்டிருந்தன. மேலும் இந்தப் பிரதிநிதிகள் யுஎஸ்ஸும் அதன் கூட்டாளிகளுமே சிரியா மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் யுத்தக் குற்றங்களுக்குப் பொறுப்பு என்று கருத்துத் தெரி வித்தனர்.

தேர்தல் குறித்து சிரியா மக்கள் மகிழ்வோ டிருப்பதாக இந்த சர்வதேசப்பிரதிநிதிகள் தெளிவாக கருத்து வெளியிட்டிருந்தனர். சிரியா மக்கள் நீண்ட காலங்களாக இதற்காக காத்திருந்ததைப்போலத் தான் தெரிந்தது. "மேற்கு நாடுகளின் ஊடகங்கள், தேர்தல் சிரியா மக்கள் மீது திணிக்கப்பட்டிருப் பதைப்போன்ற ஒரு தோற்றத்தை உருவாக்கியிருந்தன." பலமுறை வாக்குச்சாவடிகளைப் பார்வையிட்ட பிரதிநிதிகளில் ஒருவரான உகாண்டாவின் சட்ட அமைச்சர் "நான் எந்த பலவந்தமான சூழ்நிலை மையையும் பார்க்கவில்லை மக்கள் நீண்ட வரிசை யில் நின்று வாக்களித்தனர்" மக்கள் தேர்தல் குறித்து ஆர்வத்துடன்தான் இருந்தனர். மேலும் சர்வ தேசப்பிரதிநிதிகள் குழு, சிரிய அகதிகள் தாங்கள் வாழும் நாடுகளில் உள்ள தங்கள் நாட்டின் தூதரகங் களில் வாக்களித்ததைத் தடுத்ததன் மூலம் அவர் களின் உரிமையை மறுத்திருக்கிறார்கள் என்று கருத்துத் தெரிவித்தனர். சிரியா மீதான ஏகாதி பத்தியங்களின் தாக்குதல்களுக்கு எதிர்ப்புத் தெரி விக்கும் முகமாக இண்டெர்நேசனல் ஆக்ஷன் சென்டர் என்ற அமைப்பிலிருந்து பிரதிநிதிகள் ஒருவரும் யுஎஸ் பிரதிநிதி குழுவுடன் வந்திருந்தார்.

சிரியா நாட்டில் நடந்து வரும் ஒரு சுரண்டல் முதலாளித்துவ ஆட்சிக்குத் தலைமையேற்கும் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்தை ஆதரிப்பதற் காகவோ அல்லது கண்டனம் செய்வதற்காகவோ இந்தப் பிரதிநிதிகள் குழுக்கள் இங்கே வரவில்லை. பஷர் அல் ஆசாத்தை ஆதரிப்பதா வேண்டாமா என்பதை முடிவு செய்வது சிரியா மக்களைச் சார்ந்தது. எந்தவிதமான வெளிச்சக்திகளின் தூண்டு தல்களும் தலையீடுகளிலிருந்தும் விடுபட்டு எந்த ஆட்சி வேண்டுமென்பதை அவர்கள் தீர்மானிக் கட்டும். இது பிரத்தியேகமாக அவர்களின் தனிச் சிறப்பான உரிமை சிரிய மக்கள் தங்களின் ஆட்சி நிர்வாகத்தைத் தேர்ந்தெடுக்கும் உரிமையில் தலை யிட்டுத் தடுக்க யுஎஸ் ஏகாதிபத்தியவாதிகளுக்கோ அல்லது பிறருக்கோ எந்த உரிமையும் இல்லை. ஆகவே இந்தத் தருணத்தில் அந்நிய ஏகாதிபத்திய சக்திகளால் ஆதரிக்கப்படும் கலகக்காரர்களை எதிர்த்து ஆயுதம் ஏந்தி போராடுவதுடன் தேர்தல் நடத்துவதற்காக தங்களின் உரிமையையும் காத்துக் கொள்ளும் சிரியா மக்களின் முன்முயற்சிக்கு நாம் அவர்களுடன் துணைநிற்கவேண்டும்.

ஆசாத்துக்கு வாக்களிப்பது, ஏகாதிபத்திய வாதிகளின் குழப்பத்தை ஏற்படுத்துவது மற்றும் பிளவுகளை ஏற்படுத்துவது ஆகியவற்றுக்கு எதிராக தேசத்தின் ஒற்றுமைக்கு வாக்களிப்பதாகும் என்பது அவர்களுக்குத் தெளிவாகத் தெரிந்தது. ஆகவே தான் ஏகாதிபத்தியவாதிகள் மிக மூர்க்கமாக சிரியா தேர்தலை நிறுத்தவேண்டும் என்று கோரு கிறார்கள். தீவிரவாதிகள் மற்றும் ஆயிரக்கணக் கான கூலிப்படையினரிடமிருந்து சிரியர்கள் தங்களின் பொருளாதார மற்றும் அரசியல் சுதந் திரத்தை பாதுகாத்துக் கொள்வதற்கான சிரியா மக்களின் போராட்டங்களில் தேர்தலையும் ஒரு பகுதியாகத்தான் நாம் கருதவேண்டும்.

### சிரியா மற்றும் பிற நாடுகளில் நடந்த தேர்தல்களில் கிடைத்த பாடங்கள்

எகிப்து, உக்ரைன் மற்றும் சிரியாவில் சமீபத்தில் நடந்த தேர்தல்களின் பின்னணியில் பல்வேறு விஷயங்கள் விவாதிக்கப்பட்டன. இந்தத் தேர்தல்கள் அதன் குறிப்பிட்ட சில அம்சங்களில் வேறுபாடு களைக் கொண்டிருந்தபோதிலும் உலகம் முழுவதிலும் உள்ள ஜனநாயக முற்போக்கு எண்ணம்கொண்ட மக்களுக்கு ஒரே பாடத்தைத்தான் தந்திருக்கிறது. முதலில் எகிப்து மற்றும் உக்ரைன் தேர்தல்களில் குறைந்த சதவிகித வாக்குகளே பதிவாயின மற்றும் திரளான அளவில் தேர்தல் புறக்கணிப்புகள் நடந்தன. ஆனால் சிரியாவில், பல இலட்சக்கணக் கானவர்கள் ஆர்வத்துடன் தேர்தலில் பங்கேற்றனர். இந்த மூன்று தேர்தல்களையும் அந்தந்த நாடுகளைச் சேர்ந்த மக்கள் தங்களின் தேர்தல் செயல்முறையில் தங்களது முத்திரையைப் பதித்திருக்கின்றனர். இந்த மூன்று தேர்தல்களிலும் பல்வேறுபட்ட தடை களையும் இன்னல்களையும் எதிர்கொண்டு மக்கள் தங்களின் விருப்பங்களும், கோரிக்கைகளும் வெளி யுலகம் அறியும்வண்ணம் குறிப்பிடும்படியாகச் செயல்பட்டிருக்கிறார்கள். பற்பல தடங்கல்களும் இன்னல்களும் இருப்பினும்கூட தங்களது விருப்பங் களை வெளி உலகம் அறிந்து தெரிந்து கொள்ளும் வண்ணம் செய்திருக்கின்றனர். ஏகாதிபத்திய வாதிகள் தேர்வு செய்யும் நபர்களை அதிகாரத்தில் அமர வைக்கும் திட்டங்களுக்கு தாம் பலி ஆகப் போவது இல்லை என்பதை சந்தேகத்திற்கிடமின்றி காட்டியிருக்கின்றனர். இருப்பினும் இந்நிகழ்வு களிலிருந்து மிக முக்கியமானதொரு பாடத்தை கற்கவேண்டும். இந்த மூன்று தேர்தல்களில் சுதந்திரம், ஜனநாயகம் மற்றும் சுரண்டலை முடிவுக்குக் கொண்டு வருவது என்பதற்கான மக்கள் போராட்டம் உத்வேகம் மற்றும் உறுதியால் பீடிக்கப்பட்டிருந்தது.

மேற்சொன்ன சம்பவங்களும் கூட அவர் களுடைய போராட்டத்தின் தர்க்கரீதியான இலக்கை நோக்கி அவர்களை வழிநடத்திக் கொண்டுசெல்ல ஒரு புரட்சிகரக் கட்சி அவசியம் என்ற பாடத் தையும் அவர்கள் உணரவேண்டும். அப்படிப்பட்ட ஒரு கட்சியும் அதன் தலைமையும் மட்டுமே தங்கள் நாட்டின் சொந்த ஆட்சியாளர்கள் அல்லது அந்நிய ஏகாதிபத்தியவாதிகள் குறிப்பாக யுஎஸ்

தொடர்ச்சி 7ம் பக்கம்

# ஈராக் மக்களை பிளவுபடுத்தவே மத அடிப்படைவாதத்தை யுஎஸ் ஏகாதிபத்தியம் தோற்றுவிக்கிறது

பொதுவாக ஏகாதிபத்திய சக்திகள் பலவும், குறிப்பாக யுஎஸ் ஏகாதிபத்தியமும் பரந்துபட்ட இயற்கை வளமும், குறிப்பாக எண்ணெய் வளமுமிக்க மேற்கு ஆசியா மற்றும் வடஆஃப்ரிக்காவின் பரந்துபட்ட பகுதிகளில் தமது முக்கிய கேந்திரமான கட்டுப்பாட்டையும் வளமிக்க இயற்கை வளங்களின் மீதும் எண்ணெய் வளத்தின்மீதும் கேள்விகேட்பாரற்ற தங்களின் மேலாதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்ள வாய்ப்பான ஒரு வேட்டைக்களமாக மாற்றியிருப்பதுடன், ஒன்றுக்குப் பின் ஒன்றாக பல்வேறு நெருக்கடிகளையும், குழப்பங்களையும் உருவாக்கி வருகிறார்கள். அதன் தொடர்ச்சியாகவே தற்போது புதிய நெருக்கடி கிளம்பியிருக்கின்றது. லிபியா, சிரியாவின் வரிசையில் தற்பொழுது ஈராக்கும் ஒரு புதிய அத்தியாயமாக மீண்டும் வடிவெடுத்திருக்கிறது.

ஏற்கனவே யுஎஸ் ஏகாதிபத்தியம் மற்றும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியக் கூட்டாளியின் துணையுடன் ஈராக்கின் மீது தாக்குதல் தொடுத்து சீரழிவு மிகுந்த இரண்டு யுத்தங்கள் நடத்தப்பட்டு அந்நாடு பூண்டோடு அழிக்கப்பட்டது என்பதை உலகம் நன்றாகவே அறியும். அதன்பின்பு அந்நாட்டில் மிகக் கொடுமையான மனித உரிமை மீறல்களும், குடியுரிமை மீறல்களும் மத, இனக்குழுக்களுக்கிடையேயான பல்வேறு மோதல்களும் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஏகாதிபத்தியவாதிகளால் தூண்டிவிடப்பட்டு ஆதரிக்கப்பட்டுவருகின்றன. இந்த நிலைமையில் இந்த நாடு மீண்டும் ஒரு புதிய உக்கிரமான கொந்தளிப்பை சந்தித்துவருகிறது.

### பொருளாதாரத்தில் வளமை மதச் சார்பின்மையோடு இருந்த ஈராக் நாட்டை யுஎஸ் ஏகாதிபத்தியவாதிகளே சீரழித்து சின்னாபின்னப்படுத்தினர்

நாம் எடுத்துக் கொண்ட விஷயத்தைப் பற்றி மேலும் விவரிக்கும் முன்பாக, நினைவுபடுத்திக் கொள்ள ஒரு விஷயமிருக்கிறது. அதாவது யு.எஸ். ஏகாதிபத்தியவாதிகள் ஈராக்கை ஆக்கிரமிப்பதற்கு முன்பு ஈராக் நாடு, சதாம் உசேன் தலைமையின் கீழ் எதேச்சதிகார ஆட்சி கொண்ட ஒரு சுரண்டல் ஒடுக்குமுறை முதலாளித்துவ அரசியல் அமைப்பு முறை உள்ள ஒரு நாடாகத்தான் இருந்தது. இதில் எந்த ஐயத்திற்கும் இடமில்லை. ஆனால், இஸ்லாமிய அடிப்படைவாதத்தின் பிடியில் சிக்கியிருந்த அரபுப் பிராந்தியத்தின் பல்வேறு நாடுகளுடன் ஈராக்கை ஒப்பிடுகையில், மதச்சார்பின்மையை பின்பற்றியதன் காரணமாக அதாவது சமூக மற்றும் பொதுவாழ்க்கையில் மதத்தின் செல்வாக்கை விலக்கிவைத்தது மற்றும் வெகுஜனங்களுக்குக் கல்வி, சுகாதார–மருத்துவ வசதிகளை ஏற்படுத்தியது, மற்றும் பெண்கள் பிரச்சினையில் ஒரு தாராள மனோபாவத்துடன் சமஅந்தஸ்த்து வழங்கியது இவை போன்ற விஷயங்களில் பிற அரபு நாடுகளிலிருந்து தனித்து ஈராக்கை அடையாளம் காணவேண்டும்.

மேலும் ஈரான் நாட்டுடனான அதன் தொடர்ச்சியான யுத்தம் நீண்டதிற்குப் பிறகும் அது வெற்றிகரமாக ஒரு வளமான பொருளாதாரத்தைக் கொண்ட நாடாக உருவானது. இதன் அடிப்படையிலும் அந்நாடு தான் முன்பு கடைபிடித்த ஏகாதிபத்திய ஆதரவு நிலைப்பாட்டிலிருந்து விலகியும் சதாம் உசேன் தலைமையில் ஈராக் தனது தேசிய நலனுக்காக ஒரு உறுதியான ஏகாதிபத்திய எதிர்ப்பு, குறிப்பாக யுஎஸ் ஏகாதிபத்திய எதிர்ப்பில் உரிய பங்காற்றியது. மேலும் இத்தகைய போராட்டங்கள் யுஎஸ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும் ஜியோனிசத்திற்கு எதிராகவும் ஒரு போர்க்குணமிக்க உத்வேகத்தை மக்களிடத்தில் ஏற்படுத்தியது. ஆனால் அதே நேரத்தில், சீரழிந்த முதலாளித்துவக் கால சகாப்தத்தில் அதாவது ஏகாதிபத்திய காலகட்டத்தில் வளர்ந்துவரும் ஒரு முதலாளித்துவ நாடு என்ற வகையில் அந்நாட்டின் ஆளும் தேசிய பூர்ஷுவாக்களால் அரபுலகம் முழுவதிலும் விரவிக்கிடந்த மத அடிப்படைவாதத்தை முழுவதுமாக சித்தாந்த ரீதியாக வேரறுக்க செய்யவுமில்லை. மேலும் மக்களிடையே மதம், இனச்சமூகம், இனக்குழுக்கள், மதச்சிறுபான்மையினர் போன்ற பல்வேறு நிலைகளில் நிலவிவந்த ஒற்றுமையின்மையையும், பிளவுகளையும் அவர்களால் களைய முடியவில்லை. பிற்போக்குத்தனங்களின் விதைகள் அச்சமூகத்திற்குள்ளே அமுங்கிக் கிடந்தன. அவ்வப்போது அவை வெடித்துக் கிளம்பின. சதாம் சார்ந்திருந்த சன்னி பகுதியினர் ஆண்ட பழைய ஈராக்கில் பெரும்பாலும் உழைக்கும் வர்க்கம் மற்றும் விவசாயிகளாக இருந்த ஷியாவினர் மீது பாரபட்சம் காட்டும் குற்றச்சாட்டுகள் அவ்வப்பொழுது எழுந்தது. ஆனால் இந்த உள்மோதல்கள் மற்றும் பகை உணர்வுகள் அனைத்தும் ஏகாதிபத்திய எதிர்ப்பு உத்வேகம் பெற்றபோது படிப்படியாக அமிழ்ந்து போயின.

### மக்களின் ஒற்றுமையைக் குலைப்பதற்கும் அவர்களின் எதிர்ப்புகளை முறியடிப்பதற்கும் யுஎஸ் ஆக்கிரமிப்பாளர்கள் பல்வேறு தந்திரங்களைக் கையாள்கிறார்கள்

யுஎஸ் ஏகாதிபத்தியம் பேரழிவு ஆயுதங்களை ஈராக் குவித்து வைத்திருப்பதாகக் குற்றம் சுமத்தியும் தன் கொடுங்கோல் இராணுவத்துடனும், தான் அந்த நாட்டைக் கைப்பற்றிச் சீரழித்து மிகக் கொடுமையான முறையில், மிகக் கோழைத்தனமாக அதன் அதிபர் சதாம் உசேனைக் கைதுசெய்து தூக்கிலிட்டுக் கொன்ற பிறகு அங்கே தங்களது பொம்மை ஆட்சியை நிறுவினார்கள் என்பதை உலகமக்கள் நன்றாகவே அறிவர். ஆனால் இவை அனைத்திற்கும் பிறகும்கூட அவர்களால் ஈராக் மக்களைத் தங்களுக்கு ஆதரவாக மாற்றமுடியவில்லை. யுஎஸ் ஏகாதிபத்தியவாதிகளின் சட்டவிரோதமான ஆக்கிரமிப்பை மக்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளவில்லை.

சுதந்திரத்ததை விரும்புகின்ற ஈராக் மக்கள் தங்களின் நீண்டகாலப் பாரம்பரியம் கொண்ட தேசபக்த உணர்வில் ஒன்றுபட்டு யு.எஸ். ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும் அவர்களின் பொம்மை அரசாங்கத்திற்கு எதிராகவும் குரல் உயர்த்திவந்தனர். கடந்த பத்தாண்டுகளாக பல்வேறு சிறு சிறு மக்கள் எழுச்சிகள் வழியாகவும், அவ்வப்போது அங்கும் இங்கும் தற்கொலைத் தாக்குதல்கள் மூலமாகவும் பலவாறாக பரவலாக தங்களின் எதிர்ப்பினைக் காட்டிவந்தனர். பெரும்பாலும் இத்தகைய போராட்டங்களில் மக்கள் அணிதிரட்டப்படாமலும், போராட்டத் திசைவழியேதுமின்றியுமே இருந்திருக்கிறார்கள். இந்தப் போராட்டங்களிலும் யுஎஸ் எதிர்ப்பிலும் என்பது ஒரு நன்கு அணிதிரட்டப்பட்ட நிலைத்தன்மை கொண்ட தொடர்ச்சியான இயக்கம் கட்டமைக்கப்பட முடியவில்லை. ஈராக் மக்களிடையே தொடர்ந்து அதிகரித்துவந்த அதிருப்தி குறித்து யுஎஸ் ஏகாதிபத்தியவாதிகளுக்கு நன்கு தெரியும். ஈராக்கின் மீது தமது பிடியை தளர்த்துவார்களாயின் மக்களின் அதிருப்தி மேலும் அதிகரித்து ஈராக் சட்ட விரோதமாக ஆக்கிரமிக்கப்பட்டதற்கு எதிராக "அரபு எழுச்சி" போன்ற ஒரு பெரும் இயக்கமாக அது எழக்கூடுமென்றும் அவர்கள் அஞ்சினார்.

திடீரென ஒரு மக்கள் எழுச்சி ஏற்பட்டால் அது ஈராக்கின் இயற்கை வளம் குறிப்பாக எண்ணெய் வளத்தை கொள்ளையடிக்கின்ற தமது குறிக்கோளுக்கே பங்கம் ஏற்படுத்தக்கூடும் என்று கருதி 2007க்கு உள்ளாக யுஎஸ் இராணுவத்தை ஈராக்கிலிருந்து வாபஸ் பெறும் தமது வாக்குறுதியை கைவிட்டனர். ஒரு நீண்டகால மிகக்கடுமையான ஆக்கிரமிப்பில் ஈடுபட்டு வந்ததால் இராணுவத்திற்கு எதிராக மக்கள் தங்களுக்கிடையே ஒற்றுமையைப் பலப்படுத்தி எதிர்ப்பார்கள் என்ற கவலையும் அவர்களுக்கு இருந்தது. ஆகவே ஏகாதிபத்தியவாதிகள் இரண்டு காரியங்களைத் திட்டமிட்டார்கள். முதலாவதாக பெருமளவில் படைகளை வாபஸ் பெற்றார்கள். பின்பு எப்பொழுதெல்லாம் தனது பொம்மை அரசாங்கத்திற்கு ஆதரவு தேவையேற்படுகிறதோ அப்பொழுதெல்லாம் அவர்கள் உதவிக்குவர வேண்டும் என்ற நிலையையும் தொடர்ந்து பராமரித்துக்கொண்டார்கள். மற்றொருபுறத்தில் மக்களிடையே பிரிவினையை உருவாக்கும் வெறுக்கத்தக்க தங்களது கொள்கையினை நடைமுறைப்படுத்தும் முகமாக, ஒரு பகுதியினருக்கு எதிராக பிறபகுதியினரைத் தூண்டிவிட்டு சகோதரச் சண்டைகளை மூட்டிவிட்டு இனதுவேஷங்களைப் பரப்பி, மிக நுட்பமாக ஷியா, சன்னி பிரிவினர்களுக்கிடையில் பிளவினை வளர்த்தார்கள்.

ஈராக் மக்களிடமிருந்து வரும் எந்த ஒரு எதிர்ப்பையும் அவர்கள் முறியடித்ததுடன் தங்களுக்குள் மிக வெறுக்கத்தக்க பகை உணர்ச்சியுடன் சண்டையிட்டு வந்த ஷியா குழுக்களான சதார் மெஃதி ஆர்மி மிலிசியா ஆஃப் முக்ததா அல்சதார் மற்றும் பதார் ஆர்கனைசேஷன் மிலிசியா ஆஃப் சூப்ரீம் இஸ்லாமிக் கவுன்சில் இன் ஈராக் (SICI) (அப்துல் அசீஸ் அல் ஹக்கீம்) ஆகிய இரு குழுக்களை அவர்கள் நியமித்தனர். இறுதியாக யுஎஸ் இன் வெறுக்கத்தக்க சூழ்ச்சித் திட்டத்தை நிறைவேற்றுகின்ற வகையில் பதர் மற்றும் சதார் என்ற இரண்டு குழுக்களும் மனித இனத்திற்கு எதிராகக் குற்றமிழைப்பதாக ஒருவர் மீது ஒருவர் குற்றம்சாட்டிக் கொண்டு ஈராக் மக்களுக்கு இன்னல்களையும் துன்பங்களையும் மேலும் அதிகரித்தனர். ஷியா முஸ்லீம்களுக்கான புனிதத்தலமாக விளங்கும் பாக்தாத்துக்கு தென் மேற்கே உள்ள கெர்பலா நகரத்தில் குருதி வழிந்தோடும் வன்முறை மோதல்களை உருவாக்கியதில் 52கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர் 200க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். இவ்வாறுதான் யுஎஸ் ஏகாதிபத்தியவாதிகளின் செயல்திட்டங்கள் இருந்தன. ஈராக் மக்களுக்கு மரணத்தையும் இன்னல்களையும் அவை தந்ததுடன் அவர்களிடையே பிரிவினையையும் அது உருவாக்கியது.

### ஏகாதிபத்தியவாதிகள் அரபு உலகத்திலும், ஈராக்கிலும் தங்களது மேலாதிக்கத்தை நிறுவிக்கொள்ள ஷியா, சன்னி பிரிவினர்களுக்கிடையில் பிரிவினையையும், மத அடிப்படைவாதத்தையும் தூண்டிவிட்டுக் கையாள்கிறார்கள்

எண்ணெய் வளமிக்க, கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மத்தியக் கிழக்கு பிராந்தியத்தில் தனது மேலாதிக்கத்தை நிறுவிக்கொள்வதற்கு யுஎஸ் ஏகாதிபத்தியவாதிகள் பல்வேறு வழிமுறைகளையும், தந்திரங்களையும் கையாள்கிறார்கள். இதற்கு முன்பு பிரிட்டன் மற்றும் பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள் மத்தியக் கிழக்குப் பகுதியில் மேற்கொண்ட அதே தந்திரங்களைத்தான் தற்போது யுஎஸ் ஏகாதிபத்தியவாதிகள் செய்துவருகிறார்கள். அரபு நாடுகளில் ஷியா, சன்னி பிரிவினர் உள்ளிட்ட பல்வேறு மத அடிப்படைவாதப் பிரிவினர்களிடையே பிளவை ஏற்படுத்துவதற்கு எப்பொழுதுமே யுஎஸ் ஏகாதிபத்தியவாதிகள் முயன்றுவருகிறார்கள். இதற்கு முன்பு சன்னி பிரிவினர்களால் ஆளப்பட்டுவந்த ஈராக், ஷியா பிரிவினர்களால் ஆளப்படுகின்ற ஈரான் இவைகளுக்கிடையே நடந்துவந்த கொடிய யுத்தங்களின் தொடர்ச்சியாக பகை உணர்ச்சி உள்ளூர இருந்துவந்தது என்பதே உண்மை.

யுஎஸ் ஏகாதிபத்தியவாதிகளைப் பொறுத்தவரையில், சவுதிஅரேபியாவில் ஆட்சியிலிருக்கின்ற பிற்போக்கான செல்வந்தர்களை சன்னி முகாமை தலைமை தாங்குவதில் வெற்றிபெற்ற அவர்கள் ஈரானை மண்டியிடச் செய்வதில் தோல்வியுற்றனர். இவையே அவர்கள் ஈரானுக்கெதிராக பல்வேறு பொருளாதாரத் தடைகளை விதிக்கக் காரணமானதுடன் ஈரானை சுற்றிலும் சன்னி பிரிவினர் மேலாதிக்கம் செலுத்தும் அடிப்படைவாத அல்கொய்தா சக்திகள் சுற்றிவளைத்துக் கொள்ள இடமளித்தது.

லிபியாவிலும் கூட கடாபியையும் அவரது ஆட்சியையும் அதிகாரத்திலிருந்து இறக்கி ஒழித்துக் கட்டுவதற்காக அவர்கள் ஆயுதப்படைத் தலையீட்டுக்கான ஒரு சூழ்நிலையை உருவாக்கி நேட்டோ (NATO) முகமூடியை அணிந்துகொண்டு அங்கே அடிப்படைவாத கலகக் குழுக்களை ஆதரித்து வந்தனர். சிரியாவிலும் கூட அதன் அதிபர் ஆசாத்தை பதவியிலிருந்து வெளியேற்றி அவரை பணியவைக்க ஆட்சிமாற்றம் தேவை என்ற பெயரில் அங்கும் கிளர்ச்சிக் குழுக்கள் என்று அழைக்கப்படுபவர்களை ஆதரித்துவந்தனர்.

இந்துப்பகுதியில் யுஎஸ்க்கு மிகவும் நெருக்கமான கூட்டாளியாக விளங்கும் சவுதி அரேபியா மற்றும் கத்தாரின் பிற்போக்கு ஆளும் சக்திகள் துணையுடன் தாராளமாகக் கிளர்ச்சிக் குழுக்களுக்கு நிதி மற்றும் நவீன ஆயுதங்களைத் தந்து அவர்களுக்கு பயிற்சியளித்தனர். இதன் மூலமாக சிரியா அரசாங்கம், இராணுவம் மற்றும் பாதுகாப்பு படையினர் ஒருபுறமும் மற்றும் கிளர்ச்சியாளர்கள் என்று அழைக்கப்படுபவர்களோடு மறுபுறமும் தொடர்ந்து குருதி வழிந்தோடும் உள்நாட்டு யுத்தக் கலவரங்கள் நடைபெறும் வகையில் நிலைமையை ஏற்படுத்திவிட்டனர். இதன்போக்கில் அல்கொய்தாவால் ஆதரிக்கப்படுகின்ற ஐஎஸ்ஐஎஸ் (இஸ்லாமிக் ஸ்டேட் ஆஃப் ஈராக் மற்றும் சிரியா - ISIS) போன்ற யுஎஸ் ஏகாதிபத்தியத்திற்கு ஆதரவாக சிரியாவிற்குள்ளும் அதன் எல்லையைத் தாண்டியும் செயல்படுவதற்கான குழுக்களையும் அவர்கள் கண்டுபிடித்தனர். இங்கும்கூட அவர்களுக்கு முதன்மையான ஆதரவு, சவுதி அரேபியா மற்றும் கத்தாரிடமிருந்து வந்தது. அவர்கள்தான் இந்தத் தீவிரவாத அடிப்படைவாதக் குழுக்களுக்கு தாராளமாக நிதி மற்றும் ஆயுதங்கள் வழங்கி ஆதரிக்கிறார்கள்.

தொடர்ச்சி 6ம் பக்கம்

**ஈராக்**

# முதலாளித்துவம்–ஏகாதிபத்தியம் அடிப்படைவாதத்துடன் கைகோர்த்து செல்கிறது

*5ம் பக்கத் தொடர்ச்சி*

## ஷியா, சன்னி பிரிவினர்களிடையே பிளவை ஏற்படுத்தும் ஏகாதிபத்தியத் திட்டமே ஐஎஸ்ஐஎஸ் என்ற பேரபாய சக்தி வளர்வதற்கு வழிவகுத்தது

ஈராக்கில் நீண்டகாலமாக வளர்ந்து உருப்பெற்றுவந்த ஷியா, சன்னி பிரிவினை யு.எஸ் ஏகாதிபத்தியத்தாலும் மற்றும் அதன் பொம்மை அரசாங்கத்தாலும் மிகத் தந்திரமாக வளர்க்கப்பட்டு வந்தது. அங்கே இருந்த சதாம் உசேன் அரசாங்கம் சன்னிப்பிரிவினர் தலைமையிலானதாக இருந்த போதிலும்கூட ஷியா பிரிவினரும் ஒரு குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் இருந்தனர். யுஎஸ் ஏகாதிபத்தியவாதிகள் ஆளும் சன்னி பிரிவினருக்கு எதிராக ஷியாபிரிவினரைத் தூண்டிவிடுவதில் வெற்றி பெற்றனர். இறுதியாக ஷியா பிரிவினர் மேலாதிக்கம் செலுத்தும் ஒரு பொம்மை அரசாங்கத்தை ஜனநாயகம் என்ற பெயரில் நிறுவுவதில் வெற்றியும் பெற்றனர். ஆனால் இவ்வாறான நடவடிக்கைகள் ஷியா சன்னி பிரிவினரிடையே உறவில் மேலும் விரிசலையே ஏற்படுத்தியது.

குறிப்பாக 2010 தேர்தலுக்குப்பிறகு இது அதிகரித்தது. அந்தத் தேர்தலில் தற்போதைய பிரதமராக இருக்கும் அல்மலிக்கி கட்சி பெரும்பான்மை பலத்தைப் பெறவில்லை. தேர்தலில் பெரும்பான்மை பலத்தைப் பெறாதிருந்த போதிலும் கூட அது ஒரு தேசிய ஒற்றுமை கொண்ட அரசாங்கத்தை உருவாக்கப்போவதாக கூறிய வாக்குறுதியை மீறியது. முற்றிலும் குறுகிய, தன்கட்சி நலன் அடிப்படையில் செயல்பட்டு இராணுவத்திலிருந்து பல இலட்சக்கணக்கான சன்னி பிரிவினரை வெளியேற்றியது. பொதுமக்கள் பணிகளில், குடிமைப் பணிகளில் இருந்துவந்த சன்னி பிரிவினருக்கான காலி இடங்களுக்கான பணி நியமனங்களைத் தடை செய்தது. குர்து இனத்தவர்களை தனிமைப்படுத்தியது மற்றும் சன்னிப்பிரிவினர்களின் நியாயமான எதிர்ப்புகளை ஒடுக்கியது. அல்மலிக்கி அரசாங்கம் இதை வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் தங்களின் அரசியல் குருமார்களான யுஎஸ் ஏகாதிபத்தியத்தின் ஆதரவில்லாமல் செய்திருக்க முடியாது. இவ்வாறான குறுகிய ஷியா நலன் சார்ந்த நடவடிக்கைகள் பழைய சன்னி எழுச்சி இயக்கத்தின் உணர்வுகளைக் கிளர்த்திவிட்டதுடன் மிகக் கொடிய அதிதீவிரவாத சன்னி கிளர்ச்சிக் குழுவான ஐஎஸ்ஐஎஸ் மற்றும் அதன் துணைக்குழுக்கள் உருவாகவும் வழியமைத்தன.

இந்த ஐஎஸ்ஐஎஸ் – 2013 வாக்கில் பலூஜா, ரமாதி நகர்களைக் கைப்பற்றி தனது செல்வாக்கை உயர்த்திக் கொண்டது. தற்போது ஜுன் 2014 இல் மோஷுல், திக்ரித் ஆகிய நகரங்களைக் கைப்பற்றிக் கொண்டுள்ளது. அவர்கள் நாடுமுழுவதிலும் மிக வேகமாக முன்னேறி வருகிறார்கள். அவர்கள் பாக்தாத் நகரத்தை நெருங்க 60 கிமீ தொலைவே உள்ளது. அவர்கள் நாட்டின் மிகப்பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனமான வடபிராந்தியத்தில் உள்ள பாய்ஜியைக் ஜுன் 18ம் தேதி கைப்பற்றிக் கொண்டனர். பல மில்லியன் டாலர்களை வங்கிகளிலிருந்து கொள்ளையடித்திருக்கிறார்கள். தலிபான்களைப் போலவே பெண்களின் ஆடை சம்பந்தமான விஷயங்களில் கட்டுப்பாட்டையும் மற்றும் ‘வரி’ ‘லெவி’ ஆகியனவற்றையும் மக்கள்மீது விதித்திருக்கிறார்கள். அவர்கள் தாங்கள் கைப்பற்றிய பகுதிகளில் வாழ்கின்ற குடும்ப உறுப்பினர்கள் பற்றிய தகவல்களைக் கேட்கிறார்கள். அவர்களின் எதேச்சதிகார அட்டூழியத்தின் உட்சபட்சமாக குடும்பங்களில் இருக்கின்ற திருமணமாகாத பெண்களைத் திருமணம் செய்துகொள்வதற்கும், தங்களது பாலியல் இச்சைகளைத் தணிக்கவும் ஒப்படைக்குமாறு கேட்கிறார்கள். ஆதாரம் : பிபிசி, தி டைம், ராய்டர்ஸ், வாஷிங்டன் போஸ்ட், தி கார்டியன், தி இன்டிப்பண்டன்ட் (ஜுன் 16, 2014), லத்தின் போஸ்ட், (ஜுன் 16) ஹிந்துஸ்தான் டைம்ஸ் (ஜுன் 17), ஃபிரன்ட்லைன் (ஜனவரி 2014ல் வந்த கட்டுரைகள்) தி இந்து (ஜுன் 18)

நாம் மேற்குறிப்பிட்ட விஷயங்களே ஐஎஸ்ஐஎஸ் எப்படிப்பட்ட கொடூர குணாம்சம் கொண்ட இயக்கம் என்பதைப் புரிந்துகொள்ளப் போதுமானது. மேலும் தற்போதைய ஈராக் அரசாங்கத்தை தூக்கியெறிந்து எப்படிப்பட்ட ஆட்சியை அவர்கள் நிறுவ முயல்கிறார்கள் என்பதைக் காட்டவும் போதுமானது. மேலும் ஈராக் மற்றும் சிரியாவை உள்ளடக்கிய எப்படிப்பட்ட ஒரு பெரிய இஸ்லாமிய அரசை உருவாக்க இதைவிடவும் உக்கிரமான தாக்குதல்கள் தொடுப்பதற்கு தங்களைத் தயார்ப்படுத்தத் திட்டமிட்டு வருகிறார்கள் என்பதும் நன்கு புலப்படுகிறது. சமீபத்திய ஐஎஸ்ஐஎஸ் தாக்குதல்களில் கிட்டத்தட்ட 5 லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் கலவரக்காரர்களால் கைப்பற்றப்பட்ட பகுதிகளுக்கு வெளியே தப்பியோடியிருக்கிறார்கள். இது மிகப்பெரும் மனிதநேய நெருக்கடியை உருவாக்கியிருக்கிறது.

இந்த கிளர்ச்சிக்காரர்கள் இதுவரையில் 1,700 ஈராக் படைவீரர்களைக் கொன்று குவித்திருக்கிறார்கள். அவர்களின் புகைப்படங்கள் ஆன்லைனில் மிக வெளிப்படையாக பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இச்செயல்கள் போர்க் குற்றம் என்று கருதப்படும் அளவிற்கு வடிவெடுத்திருக்கிறது. இந்நிகழ்வுகள் ஏற்கனவே கிளர்ச்சியாளர்களால் கைப்பற்றப்பட்ட பகுதிகளில் வாழும் சன்னி பிரிவு மக்களிடையே மிகுந்த பீதியை ஏற்படுத்தியிருக்கிறது. சன்னி முகாமுக்குள்ளேயே அதிருப்தி நிலவி வருவதாகத் தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஷியா பிரிவினர் மேலாதிக்கம் செலுத்தும் அரசாங்கத்தை எதிர்ப்பதில் இரண்டு பலம்வாய்ந்த சன்னி கிளர்ச்சிக் குழுக்களுக்கிடையில் கிர்குக் அருகே சண்டை நடந்ததை நேரில் கண்டதாக ஒரு ஈராக் செக்யூரிட்டி அலுவலர் தெரிவிக்கிறார். இந்தச் சண்டையில் ஐஎஸ்ஐஎஸ்க்கும் அதன் கூட்டணிக் குழுவான பாஃத்திஸ்ட் கட்சியினருக்கும் இடையே நடைபெற்றது. இதில் 17 பேர் இறந்ததாக தெரிவிக்கப்படுகிறது. இந்த ஐஎஸ்ஐஎஸ் இருந்துகொண்டு சண்டையில் ஈடுபட்டுவருகின்ற படைவீரர்கள் முன்னாள் நக்ஷ்பாஜி ஆர்மியைச் சேர்ந்தவர்களாகவும், முன்னாள் சதாம் உசேனின் விசுவாசிகளாகவும், பாத்திஸ்ட்டுகளாகவும் இருக்கிறார்கள். இந்த இரண்டு குழுக்களும் கூட்டாளிகளாக இருப்பினும் இருவேறு சித்தாந்தங்களைப் பின்பற்றுபவர்களாக இருக்கிறார்கள். பாத்திஸ்ட்களின் தேசியவாத சூஃபி சித்தாந்தம் ஐஎஸ்ஐஎஸ்ன் அதிதீவிர இஸ்லாமிய நம்பிக்கையிலிருந்து வேறுபட்டது. சதாம் உசேனின் பாரம்பரியத்தைப் பின்பற்றுவதாகச் சொல்லும் பாத்திஸ்ட்டுகள் ஐஎஸ்ஐஎஸ் தற்போது ஈராக் அரசாங்கத்திற்கு எதிராக நடத்திவரும் அடிப்படைவாத கிளர்ச்சியின் தன்மையை ஏற்றுக்கொள்ளவில்லை என்றே தோன்றுகிறது.

மற்றொருபுறத்தில் தற்பொழுது ஈராக்கிய ஆட்சியாளர்கள் மற்றும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தால் 25 பில்லியன் டாலர் செலவில் பல வருடங்களாகப் பயிற்சிபெற்ற ஈராக்கின் இராணுவத்திற்கு எதிராக ஐஎஸ்ஐஎஸ்யின் கை ஓங்கியும் இராணுவ வெற்றியும் பெறுகின்றபோது யுஎஸ் ஆட்சியாளர்கள் ஈராக்கிற்கு குறைந்தபட்ச இராணுவ உதவியும் (275 போர் ஆலோசகர்கள் மற்றும் பலரை நியமித்தல்), தேவை ஏற்படின் ஐஎஸ்ஐஎஸ்யின் மீது வான் வழித்தாக்குதலையும் நடத்துவது பற்றிப் பேசிக் கொண்டிருக்கின்றனர். உண்மையில் இந்த நடவடிக்கையானது மீண்டும் ஈராக்கில் இராணுவத்தை நிலைநிறுத்தி அதன் மூலம் அண்டை நாடான சிரியா மற்றும் ஈராக்கில் அதன் மேலாதிக்கத் திட்டத்தைக் கவனிப்பதற்கு அவர்களுக்கு ஒரு புதிய வாய்ப்பைக் கொடுக்கும்.

மற்றுமொரு குறிப்பிடத்தக்க முக்கியமான வளர்ச்சிப்போக்கு என்னவெனில், ஈரானின் முக்கியத்தலைவர் அயத்துல்லா அலி கோமேனி தன்னுடைய நாடானது “ஈராக்கின் உள்நாட்டு விவகாரங்களில் அமெரிக்கா மற்றும் மற்ற நாடுகளின் தலையீட்டை கடுமையாக எதிர்க்கிறது” என்று பகிரங்கமாக பிரகடனம் செய்தார். அவர் மேலும் சொன்னது என்னவெனில் “யுஎஸ் ஆனது தங்களைக் குருட்டுத்தனமாகப் பின்பற்றுபவர்களை அதிகாரத்திற்குக் கொண்டுவருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஏனெனில், யுஎஸ் ஆனது தற்போதுள்ள ஈராக் அரசாங்கத்தின் செயலால் மகிழ்ச்சியடையவில்லை” அரபு வளைகுடா அரசுகளைப் பற்றிக் குறிப்பிடும்போது, ஈரானின் அதிபரான ஹசன் ரோஹானி சில நாடுகள் “தங்களின் எண்ணெய் வருமானத்தின் மூலமாகத் தீவிரவாதிகளுக்கு ஊக்கமளிக்கின்றனர்” என்றும் இத்தகைய உதவி அவர்களையே திருப்பி வேட்டையாடும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார். இது ஒரு வரவேற்கத்தக்க முன்னேற்றம். ஏனெனில் பின்னாலிருந்து அனைத்தையும் ஆட்டுவித்தபோதிலும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தால் ஈராக்கிற்கு எதிராக ஈரானைத் திருப்பமுடியவில்லை.

## ஏகாதிபத்தியவாதிகள் மீண்டும் உண்மையை நிலைநாட்டிவிட்டார்கள்! துன்பப்படும், போராடும் மக்களுக்கு ஒரு வரலாற்றுப் பாடத்தைக் கொடுத்திருக்கிறார்கள்

இதுநாள்வரையில், இந்த அரபுப்பிராந்தியத்தின் பல்வேறு பகுதிகளில் நடந்துவரும் தொடர்ச்சியான சம்பவங்கள் மிக ஆணித்தரமாக சில உண்மைகளை நிலைநாட்டியிருக்கிறது. முதலாவதாக, யுஎஸ் ஏகாதிபத்தியத்தால் தலைமைதாங்கப்படும் ஏகாதிபத்தியங்கள் மனித இனத்தின் மிகக் கொடூரமான எதிரிகள் என்பதை மீண்டும் உறுதிசெய்திருக்கிறது.

அவர்கள் எல்லாவிதமான மிகக் கேடுகெட்ட திட்டங்களையும் புனைகிறார்கள்; பதற்றத்தையும் அமளியையும் உருவாக்குகிறார்கள், நடத்துகிறார்கள், யுத்தங்களையும் ஆக்கிரமிப்புகளையும் செய்கிறார்கள். தங்களின் மேலாதிக்கத் திட்டத்திற்குப் பொருந்துகின்ற எந்த ஒருஅடிப்படைவாத, தீவிரவாத நடவடிக்கைகளையும் அவர்கள் தூபம்போட்டு வளர்க்கிறார்கள், இனவாத, குறுங்குழுவாத அல்லது இனச்சமூகக் குழுக்களுக்கிடையேயான யுத்தங்களைத் திட்டமிட்டு வளர்க்கிறார்கள். ஆடுமாடுகளைப்போல மக்களை நேரடியாகவோ அல்லது தங்களின் ஏஜண்டுகள் மூலமோ அல்லது அடியாள் படையாட்களின் மூலமோ கொன்று குவிக்கிறார்கள்.

அரபுலகத்தில் நடந்துவரும் தொடர்ச்சியான சம்பவங்களும் கூட என்ன காட்டுகின்றனவென்றால், ஜனநாயகத்தையும், அமைதியையும் நிலைநாட்டுகிறோம் என்ற பெயரில் செய்யப்படும் இம்மாதிரியான வேதனைமிகுந்த செயல்பாடுகள் யுஎஸ் ஏகாதிபத்தியத்திற்கும் மற்றும் அவர்களின் கூட்டாளிகளுக்கும் தங்களின் திட்டத்தை வெற்றிகரமாக முன்னேற்றிக் கொண்டுசெல்வதற்கு நல்ல பலனைத் தந்திருக்கிறது. எங்கும் எப்பொழுதும் அப்பாவி மக்களே இதில் பலியாகிறார்கள். ஆயிரக்கணக்கில் செத்துமடிகிறார்கள், லட்சக்கணக்கானவர்கள் துன்ப துயரங்களுக்கு ஆளாகிறார்கள். அடுத்ததாக, உண்மையில் அமைதியின்மை, சுதந்திரம், ஜனநாயகத்தின் மீது விழும் தாக்குதல்கள் மற்றும் அரபு நாடுளில் துன்புறும் மக்கள் அல்லது அதுபோன்று உலகின் எப்பகுதியிலும் பாதிப்பிற்குள்ளாகும் மக்கள் முன்பு ஒரே கடமைதான் இருக்கிறது. இந்த ஏகாதிபத்தியத்தை எதிர்த்து உக்கிரமான இடைவிடாத போராட்டங்களை நடத்தி ஏகாதிபத்தியத்தை முறியடிப்பதைத் தவிர அவர்களுக்கு வேறுவழியில்லை. மேலும் இந்தக் கடமையானது உடனடியாக உலகம் தழுவிய அளவில் போர்க்குணமிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தை கட்டவிழ்த்து விடாமல் சாத்தியப்பட முடியாது. இந்த மிகச்சிரமமான கடமையினை முன்னெடுப்பவர்களும் கூட ஒரு உண்மையை மறந்துவிடக்கூடாது அதாவது, ஏகாதிபத்திய சகாப்தம் என்பது பாட்டாளிவர்க்க புரட்சியையும் உள்ளடக்கிய சகாப்தமாகும் அத்தகைய சகாப்தத்தில் உலகின் எப்பகுதியில் வாழுகின்ற சுரண்டப்படும் மற்றும் இன்னலுற்றுவரும் மக்களுக்கும் மார்க்சிசம்–லெனினிசமே ஒரு வல்லமை பொருந்திய சித்தாந்த ஆயுதமாகும். ஆகவே, முன்னெடுக்கப்படும் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கங்கள் ஒவ்வொன்றிலும் கம்யூனிஸ்டுகள் அதன் மையக்கருவாக நின்று செயல்படும்போது மட்டுமே அது சரியான திசைவழியைச் சென்றடையமுடியும்.

கடந்த காலத்தில், முன்னாள் சோவியத் சோசலிச முகாம் யுஎஸ்எஸ்ஆர் இன் தலைமையில் இருந்த போது அது மக்கள் இயக்கங்களுக்கு அரணாக விளங்கியது. எந்த எதிர்ப்பும், சவாலுமின்றி ஏகாதிபத்தியவாதிகளால் தங்களது திட்டத்தை நிறைவேற்றமுடியவில்லை என்பதை இங்கு நினைவுகூற வேண்டும். தற்போது இருப்பது போல் அப்பொழுது ஏகாதிபத்தியத்தின் தாக்குதல்கள் கட்டுக்கடங்காத அளவில் இருக்கவில்லை. அரபுலகத்திலும்கூட கடந்த கால நிகழ்வுகளின் போக்கிலிருந்து பார்த்தால் ஏகாதிபத்தியத்தின் இந்த நேரத்தில் மற்றொரு விஷயத்தை அதாவது சோவியத் சோசலிச முகாமின் வீழ்ச்சிக்கு மார்க்சிசம்–லெனினிசம் என்ற தத்துவத்தின் தோல்வியோ அல்லது அத்தத்துவம் காலாவதி

தொடர்ச்சி 7ம் பக்கம்

# மானியம்...

2ம் பக்கத் தொடர்ச்சி

அமைப்பதற்காக ஏராளமான சலுகைகளை அவர்களுக்கு வாரிவழங்கினார். நிலம், தண்ணீர், மின்சாரம் என எல்லாவற்றையும் தீர்மானிக்கப்பட்ட விலை அல்லது இலவசமாகவே தந்தார். இவற்றிற்கெல்லாம் மிகக் குறைந்த விலை வைத்திருந்தால்கூட அரசாங்கத்தின் வருமானம் எங்கோ போயிருக்கும். எனவே, மக்கள் வரிப்பணத்தில் உருவான அரசு கஜானாவிலிருந்து இந்த ஏகபோகத் திமிங்கிலங்களுக்கு முழு "மானியங்கள்" தரப்படுகின்றன என்பதுதான் உண்மை. முன்பு வெளியிடப்பட்ட வராக்கடன்கள் (NPA's) என அறிவிக்கப்பட்டது ரூ 2 இலட்சம் கோடியை தாண்டியுள்ளது. இப்பணத்தை திருப்பி செலுத்தாதவர்களில் பெரும்பாலானோர் பெரிய கார்ப்பொரேட்டுகளே ஆவர். வழக்கம் போல் கடன் கட்டத்தவறிய கார்ப்பொரேட்டுகள் மீது அரசு கைவைக்காது. "எவ்வளவு முடியுமோ அவ்வளவு விரைவில் செலுத்துங்கள்" என அவர்களை தாஜா செய்யும். வங்கிகள் சேமிப்புகளை பொதுமக்களிடமிருந்துதான் பெறுகின்றன. அச்சேமிப்புகளிலிருந்து இந்த ஏகபோகங்கள் கடன் பெறுகின்றன. அதாவது சேமிப்புக்களை விழுங்குகின்றன. பொதுமக்களின் நிதியிலிருந்து ஏகபோகவாதிகளுக்கு "மானியம்" தரப்படுகிறது என்று நாம் சொன்னால் அதிகாரபூர்வ பொருளாதார வாதிகள்–கட்டுரையாளர்கள் தவறாக எடுத்துக் கொள்வார்களோ?

கடன்களுக்கான வட்டி மேலும் குறைக்கப்படுவது குறித்து ஆளும் வட்டாரத்தின் இரண்டு முகாம்களுக்கிடையே கடும் வாக்குவாதம் நடைபெற்றுவருகிறது. அரசாங்கம், மந்திரிகள், அதிகார வர்க்கத்தினர், திட்ட கமிஷனின் பெருந்தனக்காரர்கள் ஆகியோர் வங்கிக்கடன் வட்டி பெருமளவு குறைக்கப்படவேண்டுமென கடன் திரும்பச்செலுத்தாத கார்ப்பொரேட் குழுமங்களுக்கு ஆதரவாக குறைந்த வட்டி விகிதத்தில் வங்கி நிதியை கொடுக்குமாறு வாதிடுகின்றனர். ஆனால் ரிசர்வ் வங்கி அதிகாரிகள் இதை எதிர்க்கிறார்கள். ஏனெனில், வட்டி குறைக்கப்பட்டால் மக்கள் சேமிப்பில் ஈடுபடுவதை நிறுத்தி, அதிகம் செலவு செய்ய ஆரம்பித்து அதனால் பணவீக்கம் மேலும் அதிகரித்துவிடும் என அஞ்சுகிறார்கள்.

அவர்களின் இதுபோன்ற சர்ச்சையில் நாம் தலையிட வேண்டியதில்லை. ஏனெனில் அவர்கள் சர்ச்சைக்குக் கொண்டுவரும் அனைத்துக் கேள்விகளுக்கும் இன்றைய சீரழிந்த முதலாளித்துவப் பொருளாதாரத்தினால் பதிலளிக்க முடியாது. வட்டி குறைக்கப்பட்டு கார்ப்பொரேட் முதலைகளுக்கு மலிவான வட்டியில் கடன் கொடுத்தால் வங்கிகள் நலிவைத்தான் சந்திக்கும் என்பது நமது கருத்தாகும். எனவே இதுவும்கூட ஏழை மக்களின் சேமிப்பிலிருந்து கார்ப்பொரேட் திமிங்கிலங்களுக்கு அளிக்கப்படும் "மானியமாகும்". இதன்மூலம் பாடுபட்டு ஈன்ற தங்கள் சேமிப்பிற்கு பொதுமக்கள் குறைந்த வட்டியையே பெற நேரிடும்.

இவ்வாறு அரசாங்கமும் அதன் குருமார்களான ஆளும் ஏகபோகங்களும் மானியத்திற்கு எதிராக இல்லை. மாறாக மானியம் யாருக்கு தரப்பட வேண்டும் என்பதில்தான் மிகக் குறியாக இருக்கிறார்கள். கொடூர முதலாளித்துவ சுரண்டலாலும் விண்ணைமுட்டும் விலைவாசி உயர்வாலும் வதைபட்டுக் கொண்டிருக்கும் சாதாரண மக்களுக்கான மானியத்தை எதிர்க்கிறார்கள். மானியம், வரிவிலக்குகள், சலுகைகள் ஆகியவற்றால் பயனடையும் விரல்விட்டு எண்ணிவிடக்கூடிய முதலாளித்துவ உடைமையாளர்கள் தங்கள் செல்வத்தை மேலும் பன்மடங்கு பெருக்கிக் கொள்ளும் பொருட்டு அனைத்து மானியங்களும் அவர்களுக்கு அளிக்கப்படவேண்டும் என கூறுகிறார்கள்.

இந்தப் பொருளாதார பண்டிதர்களும் கட்டுரையாளர்களும் பொருளாதாரம் அரசியலை முந்தவேண்டுமேயொழிய அதற்கு மாறாக அல்ல என வாதிடுகிறார்கள். அதாவது, "பொருளாதார வளர்ச்சி" எனும் பெயரில் கார்ப்பொரேட் முதலைகள் தொழில் திமிங்கிலங்கள் மேலும் லாபமடைவதற்கான "பொருளாதார" தேவைக்காக வாழ்வுக்கான, உணவுக்கான, கல்விக்கான, சுகாதாரத்திற்கான மக்களின் அரசியல் உரிமையை மிஞ்ச வேண்டும் என வாதிடுகிறார்கள்! அரசாங்கம் மற்றும் இந்தப் பண்டிதர்களைப் பொறுத்தவரை அரசு மக்களுக்காக செலவிட்டால் அது பொருளாதார தர்க்கத்திற்கு எதிரானதாகும். ஆனால், கார்ப்பொரேட்டுகளுக்காகவும் ஏகபோகங்களுக்காகவும் அரசு வருமானத்தை தியாகம் செய்தால் அதுதான் மிகச்சிறந்த பொருளாதார தர்க்கவியலாகும். உண்மைக்கு புறம்பான இத்தகைய வாதங்களை சிந்திக்கும் ஆற்றல் பெற்ற எவராலும் ஏற்றுகொள்ள முடியாது. மக்கள் தமது மிகக் கடினமான உழைப்பின் மூலம் ஈட்டிய பணத்திலிருந்து ஏகபோகவாதிகளுக்கு மானியம் கொடுப்பதை எதிர்க்கவேண்டும். மாறாக ஏழ்மையிலும் வறுமையிலும் வாடும் பல கோடிக்கணக்கான மக்களின் அடிப்படை உரிமைகளான உணவு, உரம், எரிபொருள், சுகாதாரம், கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் நாகரீகமான சுகாதாரமான வாழ்வாதாரத்தை அனைத்து மக்களுக்கும் அரசாங்கம் உத்தரவாதப்படுத்த வேண்டும். இத்தகைய வாழ்வாதாரம் உத்தரவாதப்படுத்தப்படும்போது அரசு அதன் கடமையை நிறைவேற்றியிருக்கிறது என்று பொருள். ஆனால் இதுபோன்ற வாழ்வாதாரம் மறுக்கப்படும்போது, அரசு பொறுப்பற்ற அரசு என்ற குற்றச்சாட்டிற்கு உள்ளாகிறது. தன் குடிமக்களுக்கு நிறைவேற்ற வேண்டிய கடமையை செய்யத்தவறியதாக அதன்மீது குற்றஞ்சாட்டப்படுகிறது. அரசாங்கத்தின் இத்தகைய பொறுப்பற்ற நடவடிக்கையை கண்டு மக்கள் வாளாவிருக்கக் கூடாது. அனைத்து மக்களின் வாழ்வாதாரங்களையும் உத்தரவாதப்படுத்த அரசாங்கத்தின் மீது போதுமான அழுத்தத்தை மக்கள் ஏற்படுத்த வேண்டும். இதை நடைமுறைப்படுத்த அனைத்துப் பகுதி மக்களும் ஒன்றிணைந்து ஜனநாயகப் போராட்ட இயக்கங்களை கட்டுவதையும் அதில் பங்கெடுப்பதையும் உறுதிப்படுத்தவேண்டும்.

# ஈராக் மக்களை...

6ம் பக்கத் தொடர்ச்சி

யாகிப்போனது என்பதோ காரணமல்ல. இதற்கு நேர்மாறாக, நவீனத் திருத்தல்வாதத்தின் தோற்றமும், கம்யூனிச இயக்கத்தின் தலைமை புரட்சிகர மார்க்சிச பாதையிலிருந்து விலகி ஏகாதிபத்தியத்தின் சூழ்ச்சித் திட்டத்திற்கு இரையானதுமே காரணமாகும் என்பதை நாம் புரிந்துகொள்ள முயலவேண்டும். இவைதான் மக்கள் இயக்கத்தை பலம் இழக்கச்செய்து ஏகாதிபத்திய அடியாட்படைகளுக்கு பலத்தை அதிகரித்திருக்கிறது. அதன் வெளிப்பாட்டைத்தான் அரபு உலகம் மற்றும் அனைத்துப் பகுதிகளிலும் நாம் கண்டுவருகின்றோம்.

### மக்கள் இயக்கங்கள் அதன் தர்க்கரீதியிலான இறுதி இலக்கை நோக்கித் தம்மைக் கொண்டுசெல்ல தகுதியான தலைமைக்காகக் காத்திருக்கின்றன

ஒவ்வொரு நாட்டிலும் ஒன்றுக்குப்பின் ஒன்றாக ஏகாதிபத்தியத்தின் ஒடுக்குமுறை–ஊடுருவல்–காட்டுமிராண்டித்தனம் மற்றும் கொடுங்கோன்மையை எதிர்த்தும், தத்தமது நாட்டின் சுரண்டல் முதலாளித்துவ ஆட்சியை எதிர்த்தும் அதிருப்தியோடும், சீற்றத்தோடும் மக்கள் போராட்டங்கள் வெடித்துக் கிளம்புகின்றன. ஆனால் இவையனைத்தும் அதன் தர்க்கரீதியிலான இலக்கை நோக்கிச் செல்லவில்லை. மாறாக மிகப்பெரும் திரட்சியோடும், உத்வேகத்தோடும் எதிர்ப்பு இயக்கங்கள் நடத்தப்பட்டாலும் கூட மார்க்சிச–லெனினிச இலட்சியங்களின் வல்லமையின் அடிப்படையில் அவற்றை வழிநடத்தவல்ல புரட்சிகரத் தலைமை இல்லாததன் காரணமாக அவை அனைத்தும் திசையிழந்து வலுவிழந்து போகின்றன. ஆகவேதான் நாம் இதற்கு முன்பு புரிந்து உணர்ந்துகொண்ட விஷயங்களையும் கூட மீண்டும் புதுப்பித்துக் கொண்டு ஒரு சரியான புரட்சிகர சித்தாந்தம் மற்றும் சரியான புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி மட்டுமே இத்தகைய மக்கள் போராட்டங்களை அதன் தர்க்கரீதியிலான இலக்கிற்கு வழிநடத்தமுடியும் என்பதை புரிந்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும்.

ஏகாதிபத்தியவாதிகளின் சூழ்ச்சித் திட்டங்களை எதிர்த்து மக்கள் போராட்டங்களை அவர்கள் விரும்பும் இலக்கைநோக்கி வழிநடத்தவல்ல உண்மையான கம்யூனிஸ்டுகளால் மட்டுமே ஏகாதிபத்தியவாதிகளின் ஆக்கிரமிப்பு யுத்தங்களையும், படையெடுப்புகளையும் எதிர்த்துத் நியாயமான யுத்தத்தை தீர்மானகரமாக நடத்தமுடியும். அப்படிப்பட்ட வல்லமை கொண்ட சக்தி மட்டுமே மார்க்சிசம்–லெனினிசம் என்ற ஒற்றைச் சித்தாந்தத்தின் பலத்தில் அந்தந்த நாடுகளின் சுரண்டல் முதலாளித்துவ ஆட்சிக்கெதிராக விடுதலையையும் அதே நேரத்தில், மதஅடிப்படைவாதம், குறுங்குழுவாதம் மற்றும் அனைத்து வகையான பிளவுபடுத்தும் போக்கிற்கெதிராகவும் மக்கள் போராடுவதற்கும் உறுதுணை செய்யமுடியும்.

ஈராக் விஷயத்தில் இதுவே உண்மையாகும். யுஎஸ் ஏகாதிபத்தியத்திற்கெதிரான எதிர்ப்பியக்கங்கள் நடந்துவந்தபோதிலும் அவற்றையெல்லாம் மீறி மத அடிப்படைவாதத்தால் சின்னாபின்னப் படுத்தப்படப் போகின்ற நுழைவாயிலிலும் அப்படிபட்ட ஒரு இரத்தக்களரியில் சதைத்துண்டுகளைக் கொத்திச் செல்ல இறக்கைகளை விரித்துக்காத்திருக்கின்ற யுஎஸ் ஏகாதிபத்தியத்தினால் சூழப்பட்ட நிலையிலும் தற்போது ஈராக் நின்றுகொண்டிருக்கிறது. அவ்வாறு ஈராக் சிதறடிக்கப்படுமானால் அது யுஎஸ் ஏகாதிபத்தியத்திற்கும் அதன் அனைத்து ரகமான ஏஜண்டுகளுக்கும் பலன்தருவதாக அமைந்துவிடும். இதனால் மிகுந்த பாதிப்பிற்கு உள்ளாக்கப்படப்போகிறவர்கள் அல்லல்பட்டுவரும் ஈராக் மக்களே.

ஆகவே ஒரு சரியான லெனினிச அணுகுமுறையின் அடிப்படையில் ஒரு சரியான புரட்சிகரக் கட்சியினையும் அதன் தலைமையினையும் வளர்த்தெடுக்கவேண்டிய தவிர்க்கவியலாத மிக அவசியமான கடமையை ஆற்றவேண்டிய நிலையை மக்கள் நேருக்குநேராக சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். இக்கடமையை அவர்கள் எவ்வளவு விரைவாக நிறைவேற்றுகிறார்களோ அவ்வளவு விரைவாக அவர்கள் தற்போதைய சோதனைகளிலிருந்து மீண்டு ஏகாதிபத்தியத்திற்கு எதிராக வெற்றியை ஈட்டமுடியும். ஒரு சரியான புரட்சிகரத் தலைமையால் வழிகாட்டப்படும் சரியான புரட்சிகர இயக்கப் போராட்டச் சூழல் மட்டுமே முதலாளித்துவ–ஏகாதிபத்தியங்கள் கட்டவிழ்த்துவிடும் குறுங்குழுவாதம், மதஅடிப்படைவாதம், இனவாதம் மற்றும் இதுபோன்ற பிளவுப்போக்கினை சித்தாந்தரீதியாகவும் ஸ்தாபன ரீதியாகவும் முறியடித்து வெற்றியை ஈட்டமுடியும்.

ஈராக், சிரியா, லிபியா, பாலஸ்தீனம், லெபனான், எகிப்து போன்ற நாடுகளின் ஒடுக்கப்பட்ட மக்களின் இத்தருணத்தின் தலையாயத் தேவை இவையேயாகும். அரபுலகமும் உலகமெங்கிலும் மக்கள் இந்த வரலாற்றுப்பாடத்தை உணர்ந்துகொள்ள வேண்டும். இவைதான், உயிர்பறிக்கும் துப்பாக்கிச் சத்தங்களற்ற, ஏகாதிபத்தியங்களின் ஏவுகனைக் குண்டுகள் எப்போது எங்குவிழுமோ என்ற பயமற்ற, சகோதர இனத்தவர்கள் தங்களுக்குள் ஒருவரையொருவர் தாக்கி உயிர்பறிக்கும் வன்முறைகளற்ற மற்றும் வெற்று வாக்குறுதிகளை அள்ளிவீசி சுயநலம்தேடும் அரசியல் தலைவர்கள் மற்றும் அவர்களின் அடிவருடிகளின் அட்டூழியங்களற்ற ஒரு எதிர்காலத்தை நோக்கிச் செல்வதற்கு நாம் மக்கள் முன் வைக்கும் செய்தியாகும்.

# சிரியாவில் நடந்த...

4ம் பக்கத் தொடர்ச்சி

ஏகாதிபத்தியவாதிகள் மற்றும் அவர்களின் கைக்கூலிகளால் ஆதரிக்கப்படுகின்றவர்களுக்கு எதிராக மக்களை சித்தாந்த, அரசியல் ரீதியில் பயிற்றுவித்து இன்னல்மிகுந்த தொடர்ச்சியான போராட்டங்களின் மூலம் ஸ்தாபன ரீதியாக அணிதிரட்டிப் போராடவைக்கமுடியும். அப்படிப்பட்ட ஒரு கட்சியும் தலைமையும் உருவாகி மக்களிடம் ஸ்தாபனரீதியில் பலம்பெறும் வரையில் இன்றைய ஆட்சியாளர்கள் அல்லது ஏகாதிபத்தியவாதிகள் தொடர்ந்து பல்வேறு சூழ்ச்சிகள் மற்றும் திட்டங்களின் மூலம் மக்களின் போராட்டங்களை திசைதிருப்பி நசுக்குவார்கள். இவ்வாறாக தாஹிர் சதுக்கத்தில் நடந்த போராட்டங்கள் மத அடிப்படைவாத சக்திகள் அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொள்ள இடமளித்தது. மீண்டும் இந்த மத அடிப்படைவாதிகளை எதிர்த்து மக்கள் கிளர்ந்தெழுந்தபோது அதனினும் மிக மோசமான ஊழல் மலிந்த ஆதிகாரவெறிகொண்ட இராணுவக் கும்பல் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ள அது இடமளித்தது. அவர்களை வழிநடத்தும் புரட்சிகரத் தலைமை என்பது இல்லாததன் காரணமாக மக்கள் முதலாளித்துவச் சுரண்டல் என்ற ஒரு கொடுமையான நிலைமையிலிருந்து ஏகாதிபத்தியங்களும் அவர்களின் ஏஜண்டுகளும் மக்களை அதனினும் மிகக் கொடுமையான நீண்ட யுத்தக் கொடுமைக்குள் தள்ளியிருக்கிறார்கள். ஆகவே தத்தமது நாடுகளில் மக்கள் ஒரு தளர்வற்ற போராட்டத்தின் மூலமாக ஒரு சரியான புரட்சிகரக் கட்சியை கட்டியமைக்க வேண்டியது தேவையாகிறது. அதன் மூலம் மட்டுமே மக்கள் முதலாளித்துவச் சுரண்டல் நுகத்தடியிலிருந்து விடுதலையடைய முடியும். ஆகவே இந்த மூன்று நாடுகளின் தேர்தல் முடிவுகள் என்பதையும் தாண்டி அந்த நாட்டின் போராடும் மக்கள் நாம் குறிப்பிடும் இந்த விஷயங்கள் குறித்து தீவிர கவனத்தோடு சிந்தித்து கடந்துபோன நிகழ்வுகளிலிருந்து பாடங்களைக் கற்றுக்கொண்டு புரட்சிகரக் கட்சியைக் கட்டியமைக்கும் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும்.

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication 28th August 2014

Post.Reg.No:TN/CCN/429/2012-14
WPP Licence No:TNCCN/153/2012-14
Registered with the Registrar of Newspapers for India No : 62018/88

# கடுமையான இரயில் கட்டண உயர்வை எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) எதிர்க்கிறது – நாடுதழுவிய சக்திவாய்ந்த எதிர்ப்பியக்கம் கட்ட அழைப்பு

*எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் ஜுன் **21, 2014**யில் வெளியிட்ட அறிக்கை:*

ஈவிரக்கமற்ற முதலாளித்துவ சுரண்டலால் உதிரம் சிந்திவரும் பொது மக்கள் அதிகரிக்கும் பொருளாதாரச் சுமையை இனிமேலும் தாங்க இயலாதபோது, இரயில் பயணிகள் கட்டணம் **14.2%** சரக்குக் கட்டணம் **6.5%** தினசரிப் பயணிகள் கட்டணம் இருமடங்காக்கப்பட்டு மாய்ந்து கொண்டிருப்போரை மேலும் தாக்கி வருகிறது. இந்நடவடிக்கையால் பயணிகள் அதிகமான கட்டணத்தை கட்ட வேண்டியிருப்பதோடு இரயில்வேயால் எடுத்துச் செல்லப்படும் அத்தியாவசியப் பொருட்களின் விலையும் வரைமுறை தாண்டி எகிரும்.

காங்கிரஸ் அரசாங்கம் துவக்கிவைத்த நடைமுறையான, மிச்சமீதி இருக்கும் பாராளுமன்ற ஜனநாயக மரபுகளையும் காலில் போட்டு மிதித்து பாராளுமன்றம் நடைபெற்றும் வரும் வேளையில் அதைத் தாண்டி குறுக்கு வழியாக இந்தக் கட்டண உயர்வு அவதியுற்றுவரும் மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ளது. ஏதாவது ஒரு முகாந்திரத்தின் பேரில் எப்பொழுதெல்லாம் தேவை என நினைக்கின்றதோ அப்பொழுது கட்டணங்களை அது உயர்த்திக் கொள்ள தனக்குத் தானே அதிகாரம் கொடுத்துள்ளது.

இரயில்வேயின் கஜானாவை பெருமளவில் காலி செய்துவரும் கடுமையான ஊழல், பண விரயம், திருடு ஆகியவற்றை தடுத்து நிறுத்துவதற்காக சிறு முயற்சியும் கூட எடுக்காமல் நிதித் தட்டுப்பாட்டை சரிசெய்வது என்ற பெயரில் இந்நடவடிக்கையை நியாயப்படுத்த குண்டாந்தடித்தனமான வாதத்தை அரசாங்கம் முன்வைக்கிறது. மோசடிகள், சலுகைகள் பெறுதல், கையாடல், கொள்ளை, திருட்டு என இவையாவும் அதிகரித்துவர பயணிகள் பாதுகாப்பு, வசதிகள், சுகாதாரம், இரயில் பெட்டிகள் தண்டவாளங்கள் மற்றும் இரயில் நிலையங்களைப் பராமரித்தல், குறித்த நேரத்தில் இரயில் ஓடுதல் ஆகியவை தலைகுப்புற வீழ்ந்து வருகிறது. இதனால் அதிகப்பணம் கொடுத்தும் சேவையின்மை, வசதியின்மை, மற்றும் அவமானப்படுத்துதல் போன்றவை நடப்பதோடு தொடர்ந்து நடைபெறும் விபத்துக்களால் உயிரிழப்பும் நேரிகிறது.

இரயில்வேயை பாதித்துவரும் இந்த முக்கிய அம்சங்கள் குறித்து நடவடிக்கை எடுக்காமல் பிஜேபி அரசாங்கம் தனக்கு முந்தைய காங்கிரஸ் அரசாங்கத்தைப் போலவே **100%** அந்நிய நேரடி முதலீடு மூலமாக நவீனமயப்படுத்துதல் மற்றும் பொது–தனியார் கூட்டு (Public Private Partnership- PPP) என்ற பெயரில் இரயில்வேயை தனியார்மயமாக்க வழியேற்படுத்துகிறது.

இது, இரயில்வே துறையில் மேலும் வேலை இழப்பீட்டை ஏற்படுத்தி, பெருமளவில் பணிநீக்கம் மற்றும் குறைந்த நிரந்தர வேலைவாய்ப்பு கான்டிராக்ட் முறையாக்கப்பட்டு சம்பளவெட்டு ஏற்படுதல் ஆகியவற்றில் சென்று முடியும். இயற்கையாகவே, இந்த பயணிகள் மற்றும் சரக்குக் கட்டண உயர்வால் மக்கள் முதுகொடிந்து வரும் வேளையில் இது பெரும் தொழிலதிபர்கள், ஏகபோகவாதிகள், கார்ப்பொரேட் பணமுதலைகள் ஆகியோர் இரயில்வே மூலம் அதிகபட்ச லாபமடைய வழியேற்படுத்துகிறது. மேலும் ஆளும் பூர்ஷ்வாக்களின் ஊதுகுழலாகத் திகழும் பொருளாதார வாதிகள்–கட்டுரையாளர்கள் இந்நடவடிக்கையை சரியான திசையில் எடுக்கப்பட்ட ஒன்றாகப் புகழ்கிறார்கள்.

காங்கிரஸ் அரசாங்கம் பாராளுமன்றத்தை தவிர்த்துவிட்டு சரக்குக் கட்டணங்களை உயர்த்துவது "பின்கதவு" வழியான செயல்பாடு எனவும் "பாராளுமன்றத்தின் மேன்மையை குறைக்கும் நடவடிக்கை" எனவும் பிரதமர் நரேந்திர மோடி **2012**யில் கூறினார். ஆனால் அவரே அதைப்போன்றதொரு காரியத்தை தலைமைதாங்கி செய்வது அவரது வேஷதாரித்தனத்தின் உச்சத்தைக் காட்டுகிறது. இவ்வாறு முந்தைய அரசாங்கங்களைக் காட்டிலும் தற்போதைய பாரதிய ஜனதா கட்சி அரசாங்கம் மக்கள் நலனுக்கு விரோதமாக செயல்படுவதில் உறுதிபூண்டுள்ளதை நிரூபிக்கும் வகையில் செயல்படுகிறது.

எனவே இந்த அநியாயமான முன்னெப்போதுமில்லாத இரயில்வே கட்டண உயர்வை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இதுபோன்ற ஒன்றன்பின் ஒன்றான படுபாதகமான நடவடிக்கைகளை எடுக்க அனுமதித்தால் அது அடக்குமுறையை கட்டுவிழ்த்துவிட மேலும் வாய்ப்பளித்துவிடும். எனவே மக்களின் வாழ்வு மற்றும் வாழ்வாதாரத்தின் மீது சுரண்டல் ஆளும் பூர்ஷ்வா வர்க்கத்திற்கு சேவை புரியும் அரசாங்கங்கள் தொடுக்கும் தாக்குதலை எதிர்த்து பொங்கி எழுமாறும் காலத்தை தாமதிக்காமல் நாடுதழுவிய ஒன்றுபட்ட போராட்ட இயக்கம் கட்ட முன்வருமாறும் பொதுமக்களை கேட்டுக் கொள்கிறோம்.

# கும்பகோணம் பள்ளித் தீ விபத்து வழக்கின் தீர்ப்பு: மக்களுக்கு ஏமாற்றம்

*கும்பகோணம் பள்ளித் தீவிபத்து சம்பந்தமாக தஞ்சை மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிபதி அளித்த தீர்ப்பு ஏமாற்றமளிப்பதாக உள்ளது எனக்கூறி எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாநிலச் செயலாளர் தோழர் A ரெங்கசாமி அவர்கள் ஆகஸ்ட் **1, 2014** அன்று வெளியிட்ட அறிக்கை:*

தமிழக அரசாங்கமும் அதன் அதிகாரிகளும் தனியார் பள்ளிக்கூட நிறுவனங்களும் பள்ளிக்கூட கட்டமைப்பு விதிகளை சரியாக கடைபிடிக்கத் தவறியதன் விளைவாகவே இவ்விபத்து ஏற்பட்டுள்ளது. அரசாங்கம் கடைபிடித்துவரும் தனியார்மயக் கல்வி கொள்கையின் விளைவாக கல்வி நிறுவனங்கள் அதிக லாபமீட்டுவதற்கு உதவும் விதமாக அரசாங்கம் செயல்படுவதே இப்படிப்பட்ட கோரவிபத்து ஏற்படக் காரணமாகும். நிலைமை இவ்வாறிருக்கையில், இவ்விபத்திற்கான முழுப்பொறுப்பையும் அரசாங்கத்தை ஏற்கச்செய்வது சம்பந்தமாக இத்தீர்ப்பில் ஏதும் குறிப்பிடப்படவில்லை.

மேலும், தண்டனை வழங்கப்பட்டுள்ள **21** பேரில் **10** பேர்மீது விதிக்கப்பட்ட அபராத தொகைக்கொண்டு பாதிக்கப்பட்ட குழந்தைகளின் குடும்பங்கள் மிககுறைந்த தொகையே பெறும் வகையில் தீர்ப்பு கூறப்பட்டுள்ளது. எனவே, பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் குறைந்தது **25** லட்சம் வழங்கவேண்டுமென தமிழக அரசாங்கத்தை எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சி கேட்டுக்கொள்கிறது.

பாதிக்கப்பட்ட குடும்பங்கள் அதிக இழப்பீடு கோரி நீதிமன்றத்தை நாடுவது மட்டுமல்லாமல் நல்லெண்ணம் கொண்டோரும் இப்படிப்பட்ட விபத்துக்களை உருவாக்கும் அதீத லாப நோக்கங் கொண்ட தனியார்மய கல்விக் கொள்கைக்கெதிராக போராடுவதன்மூலம் மட்டுமே சரியான தீர்வை பெறமுடியுமென எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சி பொது மக்களனைவரையும் கேட்டுக்கொள்கிறது.

# மத்திய பட்ஜெட் 2014...

*1ம் பக்கத் தொடர்ச்சி*

குறைக்கப்பட்டுள்ள வரி மற்றும் தீர்வை பலன்கள் உற்பத்தியாளர்களுக்கு அல்லாது நுகர்வோர்களுக்கு சென்றடைவதை உறுதிப்படுத்துவது குறித்தும் குறிப்பிட்டு எதுவும் சொல்லப்படவில்லை.

செலவு சீர்த்திருத்தங்களை கவனிக்க ஒரு செலவு மேலாண்மை கமிஷன் அமைக்கப்படுவதன் அறிவிப்பானது, மிகுந்த கண்டனத்திற்குள்ளான கட்டண மற்றும் சர்சார்ஜ்களை தானே நிர்ணயிக்கும் அதிகாரம் கொண்ட இரயில்வே கட்டண ஆணையம் அமைக்கப்பட்டதன் வழியில் மானியங்களை வெட்டுவது மற்றும் அதுபோன்ற மக்கள் விரோத நிதிக்கொள்கைகளை முடிவெடுக்கவும் அமல்படுத்துவதற்குமான ஒரு கருவியோ என நாங்கள் அஞ்சுகிறோம்.

எனவே, நிதியமைச்சர் பெருமையாக சொல்லிக்கொள்வதுபோல் இந்த பட்ஜெட்டில் சாதாரணமக்களுக்கான 'திசைவழி நடவடிக்கை' எதுவுமில்லை. அனைத்து முன்மொழிவுகளும் 'முதலீட்டாளர்கள்' எனும் பெயரில் கார்ப்பொரேட் துறையினர் மற்றும் தொழில் குழுமங்களின் நலன்களுக்கானதே. இந்த சீர்திருத்தத்திற்கான பட்ஜெட் தடம்புரண்டு நெருக்கடியில் சிக்கியிருக்கும் முதலாளித்துவப் பொருளாதாரத்தை மீட்டெடுக்காது என்பது மட்டுமல்ல மக்களின் வாழ்க்கையை மேன்மேலும் சீரழிக்கவே செய்யும். ஏனெனில் நேரடி அந்நிய முதலீடு தனியார்மயம், ஊகத்தையும் சூதாட்டத்தையும் ஊக்கப்படுத்தி மூலதன சந்தை சீர்திருத்தம் ஆகியவற்றுக்கான ஆரவாரமான வரவேற்பு என இவையாவும் மேற்கத்திய நாடுகளில் எங்கெங்கெல்லாம் பின்பற்றப்பட்டனவோ அங்கெல்லாம் பகாசுர நிதிநிறுவனங்கள் திவாலாகி சரிந்துபோனதுதான் இதுவரையில் நடந்திருக்கிறது என்பதே நமது உறுதியான அபிப்பிராயமாகும்.

வர்த்தக அமைப்புகளும் பெரிய ஏகபோகங்களும் அதன் சேவகர்களான பொருளாதாரவாதிகளும்–கட்டுரையாளர்களும் பிஜேபி அரசாங்கத்தின் இந்த பட்ஜெட்டை வானளாவ புகழ்ந்து கொண்டிருக்கும்போது, இரக்கமற்ற முதலாளித்துவப் பொருளாதார ஒடுக்குமுறை இயந்திரத்தின் சக்கரங்களில் சிக்கி அழுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் நாட்டு மக்கள் இப்பட்ஜெட்டை நிராகரிக்க வேண்டும். மக்கள் நலனை அழிக்கும் நிதி மற்றும் பொருளாதார கொள்கையை கைவிட அரசாங்கத்தை போராட்ட இயக்கத்தின் அழுத்தத்தின் மூலம் நிர்ப்பந்திக்க வேண்டும்.

## பிஜேபி அரசாங்கத்தின் இரயில் கட்டண உயர்வு, பெட்ரோல், டீசல் உயர்வு, பொதுத்துறை நிறுவனங்களின் நேரடி அந்நிய முதலீட்டைக் கண்டித்து ஆர்ப்பாட்டங்கள்




**சென்னையில் 23.06.2014ல் நடைபெற்றது.**




**தேனியில் 24.06.2014ல் நடைபெற்றது.**

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா, தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு - வெளியிடுபவர்: வி.பி.நந்தகுமார். அலுவலகம் : பு.எண். 16 (ப.எண். 18), இராட்லர் தெரு சூளை, சென்னை 600 112, அச்சகம் : அய்யனார் ஆப்செட், நெ.10, சுப்பராவ் நகர், சூளைமேடு, சென்னை 600 094. ஆசிரியர் : வி.பி.நந்தகுமார்

Published by: V P Nandakumar on behalf of Socialist Unity Centre of India, Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 112 and Printed at Aiyanar Offset, No.10, Subha Rao Nagar, Choolaimedu, Chennai 600 094. Editor : V P Nandakumar
Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : www.sucic.in